✝

சர்வேஸ்வராய நம:

# கிரித்துவ ஞான தியான உத்தார வினிய புஞ்சம்.

இது

சென்னை வண்ணயம்பதி வித்துவான்

"சமரச ஞானபாஷிய வ்யாகரண திவாகரரும்"

சபாப் பிரசங்கியுமாகிய

இயற்றமிழாசிரியர்

ஸ்ரீமத், ச. கி. தோமாசு புலவரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை இராயபுரம் காட்டன்பிரஸ் ரோட்

அர்ச். சூசையப்பர் பஜனை சங்கத்தார் கோரிக்கையின்படி

ஷை புலவரவர்களின் குமாரர்களான

ச. கி. தோ. பிரகாசம் பிள்ளை, மாணிக்கம் பிள்ளை,

ஆரோக்யசாமி பிள்ளை,

இவர்களது பெருமுயற்சியாலும்

பல அன்பர்களின் பொருளுதவியாலும்

முன்பிரசுரித்த பிரதிக்கிணங்க

புலவரவர்களின் மாணவர்

திரிசிரபுரம் வீ. கந்தசாமிபிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை அமெரிக்கன் டைமெண்ட் யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(காப்பிரைட்.)

1919.

14 OCT 1919



சர்வேஸ்வராய நமஃ

# திரித்துவ ஞான தியான உத்தான வினிய புஞ்சம்.

இது

சென்னை வண்ணையம்பதி வித்துவானும்

"சமரச ஞானபாஷிய வ்யாகரண திவாகரரும்"

சபாப் பிரசங்கியுமாகிய

இயற்றமிழாசிரியர்

ஸ்ரீமத், ச. கி. தோமாசு புலவரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை இராயபுரம் காட்டன்பிரஸ் ரோட்

அர்ச். சூசையப்பர் பஜனை சங்கத்தார் கோரிக்கையின்படி

ஷை புலவரவர்களின் குமாரர்களான

ச. கி. தோ. பிரகாசம் பிள்ளை, மாணிக்கம் பிள்ளை,

ஆரோக்யசாமி பிள்ளை,

இவர்களது பெருமுயற்சியாலும்

பல அன்பர்களின் பொருளுதவியாலும்

முன்பிரசுரித்த பிழதிக்கிணங்க

புலவரவர்களின் மாணவர்

திரிசிரபுரம் வீ. கந்தசாமி பிள்ளை யவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை அமெரிக்கன் டைமெண்ட் யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(காப்பிரைட்.)

1919.

## திருவணக்கம்

### கலி விருத்தம்.

அப்பன் சீரரு ளார்வரி வேதமீந்
தப்பன் றூய்மரியின்சு தன் பு. த. செய்
யப்பன் வித்தியா நம்குருவா குனா
னப்பனு மலையப்பனை வாழ்த்து வாம்!

---

## அவையடக்கம்.

சிறுகுழந்தை சொன்மொழிக்குச் செவியின் புறவர்களா
லருகுழந்தை குரலொலித்து வழங்கிப்பாச்சி யெனக்கனிந்து
ஒருகுழந்தை கொடுமீட்ட வுயர்மரிதா ளடைக்கலர்கா
ளிருகுழந்தை சொன்மொழி கொண்டென் மொழிக்கு மிரங்குவரே.

---

## மூதுரைமெய்மை.

லூக்கா 11. அதி 27.

இஸ்ரவேலின் பிரபுவும் எங்களின்திவ்ய இரக்ஷ கருமாகிய
ஞானசற்குருவே உம்மைச்சுமந்த உதிரமும் நீர்அமுதுண்ட
கொங்கைகளும் பாக்கியம் பெற்றது களாமே
கிருபை பெற்றவளே நீவாழ்க கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்
என்னுண்ட வருடைய தாயார் என்னிடத்தில்வர நானெவ்வ
ளவுபாக் கியத்தைப் பெற்றேன். லூக் 1. அதி 28-43.

---

## திருமரி விஷயம்.

அநாதியே! பரம்! அப்பரமோ
ஆதி யொன்றியது! அரூபம்! அரூபமோ
சொரூபமுற்றது! அருள்! அவ்வருளோ
தூய்மையுற்றது! ஞானம்! ஞானமோ
நிறைவுற்றது! மரிபரிணய வல்லப வம்ருதம்.

ஆகையான் மரிப்பிரகாச மான்மியோ தயத்தைச்
சொல்ல வென்றுலோ! சொலற்கு நானெவ்வளவு.

# சிறப்புப் பாயிரம்.

இஃது,

இந்து லாக்கியோ ஞாசிரியரும்,

சென்னை வெற்றிக்கொடியோன் எடிடரும்,

செண்ட் மேரிஸ் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்,"

செந்தமிழ் நாவலருஞ், சபாப் பிரசங்கியுமாகிய,

**ம-ா-ா-ஸ்ரீ பு. த. செய்யப்ப முதலியார் அவர்கள்**

கூறிய,

ஆசிரியப்பா.

கயல்புலால் கடியுங் கடிபுனை மலிந்த
வயல்தேன் பாய்ந்து வளமையிற் குன்றாத்
தண்கடற் சேர்ப்பும் பொன்மதி லெழிலார்
வண்ணயம் பதிவாழ் கண்யகித் தேரி
முத்தவன் முத்திற் கொத்தவோர் ரத்நம்
பெற்றிடின் முத்தம் பிறங்குமென் றன்னி
யத்தனை யிறைஞ்சச் சத்திய நெறியின்
வானளி யானே கான்முளை யாகிக்
கோனளி தீட்சைக் கொண்டொரு முதலாய்
வளர்ந்தருட் கவிகள் சுரந்திடக் கண்டு
இன்னோன் யாரெனத் தன்னிக ரில்லான்
வன்வடு வதனுள் தன்கர மிட்டோன்
பெயரின னென்ப பெரிதுவந் திவனை
நயமுடன் விளித்து நன்னூல் காரிகை
பன்னரு நூற்பல வன்புற வோதினன்
சென்னைநன் னகர்சார் மின்வளர் ராய
புரத்தினில் திரித்வ தியானபொற் சபையார்
உரைதர வியந்து உயர்தான் வாதை
பட்டிறந் தளித்த பான்மையு முதன்மூன்
றட்பார் நவமு மனைமரித் துதியும்
அருந்தரு ணத்தி லளித்தன னன்கு
திருவருள் சுரக்கச் சேணுளர் களிக்க
நாவலர் மதிக்க நாற்ப தந்தாதி
பாவலர் படிக்கப் பாரிடை மாதோ.

# சாத்துக் கவிகள்.

அஷ்டாவதானம்,

**ம-ா-ா-ஸ்ரீ பூவை. கலியாணசுந்தர முதலியார்**

அவர்களா லியற்றிய ஆசிரிய விருத்தம்.

முந்தாதித் தமிழுறுசொற் சுவையனைத்து மாங்காங்கு முயங்க வண்
ணந்தாதி ருக்கும்விழு மியதான பொருளமைதி நன்கு வாய்ப்ப [மை
விந்தாதி ரித்துவஞா னத்தியான வுத்தான வினிய நாற்ப
தந்தாதி சொற்றனனற் புகழ்தோமா சுப்புலவ னன்பின் மாதோ!

---

இராயபுரம் அஷ்டாவதானியும், இயற்றமிழ் வல்லவருமாகிய

**ம-ா-ா-ஸ்ரீ ச. ஜெகராவு முதலியார் அவர்கள்**

இயற்றிய, அறுசீர்க்கழி நெடிலாசிய விருத்தம்.

மேற்பதந்தா திசைக்குறுநர்க் கருள்பரம வுத்தான வியன்சீர் காண, நூற்பதந்தா தியைவண்ணைக் கித்தேரிமுத் தண்ணல் நோன் மைசாலு, ஏற்பதந்தா திப்புகழ்செய் தோமாசு கவிராய னினிமை மல்கும், நாற்பதந்தா தித்தொடையல் புலவருளங் களிசிறப்ப நவிற் றினனல்.

---

சென்னை அர்ச். அடைக்கலநாயகி கோவில் உபதேசியாராகிய

**வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ சி. கண்ணுசாமி முதலியார்**

அ வ ர் க ள ா ல் இ ய ற் றி ய

கட்டளைக் கலித்துறை.

சீரோங்கு முத்துவ மான வனுதியின் சேவடிக்குப்
பாரோங்கு தோமாசு நாவலன் போற்றுறும் பைந்தமிழ்தான்
ஏரோங்கு நற்பொருள் சொற்சுவை மேவு மிசைந்திடுவோர்
காரோங்கு கன்மனந் தன்னை யுருக்குங் கதிதருமே.

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருவள ருலகஞ் சீர்பல வுயிரும், இருவளர் தருவு மியாவையு மளித்துக், காத்தழித் தருளிய கருதுமுத் தொழிலான், பூத்தரு ளறுகுணன் பொன்னடி தனைதுதி, சுத்தசொல் லார்ந்த துன்னரும் வள்ளல், கித்தேரிமுத்து கிளர்தவத் துதித்தோன், சொற்சுவை பொருட்சுவை தோன்றத் தெளிந்த, நற்சுவை பொருந்தி நன்னயம் பெறவே, சரிமறை நீதியும் தந்தது யாதி, திருத்துவ ஞானதி யான வுத்தான, இனியநாற் பத்தந் தாதியென் றொருநூல், துன்னிரு தோத்திரந் துகளறச் சொற்றான், அன்பு பொறுமை அடக்கமின் சொல், இன்புறுமணியா யேற்றசற் குணத்தோன், இத்தகை பெருஞ்சீ ரிலங்குற வாய்ந்த, வித்தகப் புலமை வித்துவமணியாம், வாச பூபுகழ்ந்து மதிக்குந் தோமாசு, மாசறு சிறப்பின் மதிவல்லோனே.

---

இராணிப்பேட்டை. யூனிவர்சிட்டி, ஆர்க்காடு அமெரிக்கன் மிஷன்
ஐஸ்கூல் தமிழ்த் தலைமைப்புலமை
## ம-ா-ா-ஸ்ரீ பா. கிருஷ்ணசாமி செட்டியார்
அவர்களாலியற்றிய நிலைமண்டில ஆசிரியப்பா.

புகழுறு பொழிவாழ் பூவைப் பார்த்துத்
திகழுறு வனிதையர் திங்களென் றுன்னும்
வல்லோர் வதியும் வண்ணயம் பதியோன்
இல்லோர் கற்பக வின்றுதா தாவாய்ப்
பிறந்தகித் தேரிமுத் தாத்தனையன்
சிறப்பு நெறியைச் செப்புசின் னூல்களை
யுலகம் வியக்க வுரைத்த செய்யப்பன்
உலூக மாமுனி யொத்ததோ மாசு
திரித்வ ஞான தியான வுத்தான
நரிம்பி லினிய நாற்ப தந்தாதி
யியற்றின னதனை யிசைத்திரு வாசகம்
இயைவது மற்றை யில்லை நிகரே.

---

தண்டலம் ம-ா-ா-ஸ்ரீ வித்துவான்,
## சுப்பராய முதலியா ரவர்களா லியற்றிய
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வண்ணயம் பதிமேவு கித்தேரி முத்துதரும் வளவனென
அண்ணல் தோமாசுநற் கவிஞன்செந் தமிழதனை யன்பினுய்ந்தே
எண்ணருஞ்சீர் திரித்துவஞா னத்தருளை யந்தாதி யினிது செய்தான்
மண்ணவரி லாயிரநா பெற்றிடி லதன் மகிமை வழங்கலாமே.

---

பவழை, வித்துவான்.
## ம-ா-ா-ஸ்ரீ அ. தம்புசாமி முதலியார்
அவர்களால் இயற்றப்பட்ட,
எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திரித்வஞா னத்தியான வுத்தானத்தின் சிரேவையுந் தோமாசு
புலவன் றேர்ந்து, உரைத்தவினிய நாற்பதந்தாதி யஃதி லுள்ள
பொருள் கேட்போர்தஞ் செவிகட் கின்பம், அருத்தமுற வாய்ந்
தோர்க ளுவிற்கின்ப மன்றியுமே வதன்பயன்க ளணிகண்மற்றப்,
பொருத்துசொற் றொடர்பு ணர்ந்தோர் மனதிற்கின்பஞ் சுரக்குமே
ஞானவழிவுரைக்கு மாதோ

---

இராயபுரம், ம-ள-ள-ஸ்ரீ

**உ. அ. சவேரிமுத்துராய முதலியார்**

அவர்களா லியற்றிய

விருத்தம்.

மருமலர்ச் சோலைசூழ் வண்ணையம் பதியான் மாமரிநேசன் கித்தேரிமுத்தாப் பிள்ளைதன், அருந்தவத்துதித்த செல்வன் தோமாசு ஆண்டவ னளித்த மறையி னுட்பொருளை, ஒருதிரட்டாக்கி திரித்வ ஞான தியான உத்தானவினிய நாற்பதந்தாதியாக, பெரும்பெயர் தந்து அச்சடித் ததினால் பேசருங் கீர்த்தி பெற்றனனே.

---

சென்னை கொண்டிநகர் சிவத்தியான பஜனையின் தருமீகரும் ஷ சபையின் உபாத்தியாயருமாகிய,

**ம-ா-ா-ஸ்ரீ ப. முனிசாமி சோதிட ரவர்கள்**

இ ய ற் றி ய,

எண்சீர்க்கழி நெடிலாசிய விருத்தம்.

இனிதினிது நறையருவி பாயுஞ் சென்னை யெழில்வண்ண யம் பதிபூத் தியங்குவான்சொல், லினிதினிது கித்தேரி முத்தா செவ்வே ளிருந்தவத்துற் பவித்திட்ட சேய்சீர் வாய்மை, யினிதினிது நற்கவி சம் பிரமன்தோமா செனும்புலவன் திரித்துவத் தியான முன்னி, யினிதினிதுத் தானவந்தா தியைநாற் பஃதா யிக்குவல யத்திற்கென வீந்தான் பாரே!

---

இந்நூலாசிரியரின் மாணக்கருள் ஒருவராகிய

**ம-ா-ா-ஸ்ரீ தி. வ. இரா முருகேசம் பிள்ளை**

அவர்களால் இயற்றிய,

நே ரி சை யா சி ரி ய ப் பா.

பொற்புறு ஞானப் பொருட் டலர்மீது, உற்றமெய் நிலவ மொளிகொழித் தெழின்வான், நற்குரு சேசு நசரையூர் பதிமேன், பொற்புறு திரித்வ ஞானதி யான, வினிய வுத்தான மெனுந லந்தாதி, பனிமைகொட்டுய கனிமைசொ லாற்றி, வண்ணயம் பதியின் வாய்மைகொண் டொளிரும், புண்ணிய னெனுங்கித் தேரிமாற் புதல்வன், ஒழுக்க முடைமை யுண்மைநன் னெறியன், அழுக்கா றிலாமா ணருந் தகைச் செம்மல், மணியாம் திரித்வ தியான சங்கத்து, பணியாம் தலைமைப் பாவலன் தோமா, செனுமுனி வன்கவி! யினிது இனிது, பனிமா லிமயப் பருப்பத னங்தோ, சொற்றினன் சொற்றினன் தூய்மைப், பெற்றியாளன் பெருமை சீர்த்தியனே.

---

சர்வேசுராய நமஃ

# திரித்வ ஞான தியான வுத்தான * வினிய

# நாற்ப தந்தாதி.

## கடவுள் வணக்கம்.

## காப்பு.

எண்சீர்க் கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

யோவான் 1. அதி 1.

சொற்றறிய சொற்றுகிச் சொற்சீர் பூத்த
சுடராகிச் சுடர்நிலவுஞ் ஜோதி தேவ
நற்கருணை வடிவாகி யரூபி யாகி
நானுகிக் கதிர்மதிவான் புவன மாகிச்
சிற்குணத்த ரரிதுணருந் தேஜஸ் ஸாகிச்
சிகரமுறு மணிமன்றந் தெளிதற் கில்லாக்
கற்பனைபத் தெழிலிருகல் லெழிதி யீந்த
கடவுளருங் கழன்முடிக்குக் காப்பதாமே.

## நூல்.

சங்கீதம் 121-3-4.

இறையருங் கழலே யேத்த லினிது. லூக்கா. 11. அதி. 13.

1. திருபூத்த வடிவறுநற் படிவ ஞானத்
தெண்டிரையுட் பனித்துமறைச் சிகரத் தேறி
யுருபூத்து வெளிநிலவி யிளமை மூப்போ
டொப்பின்றி நீத்தபரி சுத்தன் றூய்மைக்
கருபூத்துத் திருமரிபொற் கரத்திற் பூத்துக்
கண்வளரா தெவ்வுயிருட் கலந்து வாய்மை
யிருட்பூத்த பாமரர்க்காய்க் குருசிற் றெங்கி
யினிதுற்ற மெய்ப்பொருளை யேத்து வாமே.

உற்றமெய்ப் பொருளை யோருத லினிது. 1. திமோத் 2. அதி 5.

2. ஏத்துவதிற் சான்றென்காண்? சாத்திரத்தி
லிருக்கின்ற மகிமையென்காண்? முப்பாரொன்றிப்
பூத்தலர்ந்த கனிவென்கா? ணங்தோ! மெய்ம்மைப்
பூசனையைச் செய்வீரேற் போதம் வாய்த்து

* இனியம் என்பது இனியசொற்கள் ஆத்துமாவுக்கு மதுரமும் என்புக்கு ஒளஷதமாய் இருக்கும் நீதிமொழிகள் 17 அதி. 24.

ஆத்துமவி ரட்சணிய மடைவீர்! வெய்ய
வழற்படியிர் கருணையரு ளாளன் சேசு
நேத்திரத்தைச் சாய்த்தினிது காக்க நம்பா
னெடுமரத்தி லுற்றவனை நினைந்திடரே

வானரும் பதியை வணங்குத லினிது. எரேமி 29. அதி 13-14.
1, தீமோத் 3. அதி 16.

3. நினைந்துருகத் தன்வடிவென் வடிவி லொன்றி
நீள்கதிர்பொன் ஞசனத்தி னிற்ப தென்காண்?
கனைகடன் வான் பிறவியுயிர்ப் பலவு மாகிக்
காணுதாய்க் கதித்துக்கதி யளிக்குந்தாயாய்
அனையபுக ழுறுநட்பின் கருணை ஜோதி
யங்கிங்கு மெங்குளதா யலர்ந்து நம்மை
மனையெனக்கொண் டாண்டடிக்கீழ் வைக்க தூய
மரத்திணைந்த வனையினிது வணக்கஞ் செய்யே.

கஞ்சதஞ்சங் காண்டலினிது. லூக் 7. அதி 37.

4. வணக்கமுற்ரோ ரினிதுபெற்ற மகிமை யென்காண்?
வலமுறைந்த கயவனரும் வாக்காற் சீர்த்தி
யிணக்கமுற்றுப் பரமடைந்தான் மடவார் வாழ்த்தி
யிரபூனியென வேத்தியிரு கரத்தைக் கூப்பி
மணக்குநறு நெய்ப்பூசி யளகங் கோதி
வாலறிவன் றுடைத்து மகிமை நேர்மாண்
கணக்கினிது பெற்றனட்டுேய்க் குருசிற் றொங்கிக்
கவிழ்ந்தவன்றன் முளரியலைக் காண்பாய் நெஞ்சே.

லூக்கா 2. அதி, 16-17. மத்தே 2. அதி. 11.
வண்டென மொய்த்து வாழ்த்த லினிது.

5. கண்டினிது காட்சிபெற்ற புநித மென் காண்?
கங்குல்தவழ் திங்கட்சத கோடி கோடி
விண்டதெனக் கொண்டலுற மண்டி லங்கொண்
மெய்மரிவீ கோற்கரனும்! விபுதர் வேந்தர்
அண்டர்பிரான் பொன்னெழிற் கொள் தேகந்தாங்கு
மரியபுல்லாய்ப் பிறந்திலமென் றுட்கு ழைந்து
வண்டினிது மொய்த்தலர்தாட் பெற்றோர் காட்சி
மரத்திலறை யுண்டவனை வாழ்த்தற் செய்யே.

பொய்யா மொழியாற் போற்றலினிது. லூக்கா 7. அதி 11-17.

6. செய்யவருட் கோகனகம் பற்றற் குற்ற
சீர்மறைத்தென் னுரையென்காண்? தீர்க்க ரந்தோ!
மெய்ம்மறையம் பரனைத்தொழ வினைக ணீற
மென்னமுதன் முறையுளதவ் விதியை யாய்ந்து

உய்யும்வகை யினைப்பெறுதி சேயிழந்த
வொண்டொடிதன் டாள்வருடி யுண்மை கூறப்
பொய்யடைந்தி லள்ளினிது பெற்ருட் காட்சிப்
பொருந்தகுரு சுறைந்தவனைப் போற்று வாயே.

தனியருங் கழலைச் சார்த லினிது. அப் 2. அதி 36-38.

7. வாயாரப் புகழ்ப்பாடிக் குயிற்று தற்கு
வசனித்த விஞ்சையென்காண்? வாய்மை யென்காண்
நீயோரே? விசும்பலரம் பரம ஞமஞ்
சேவித்துப் பரகதிசிர்ப் பெறுதி யென்றே?
தூயாரு மொழிபகர்ந்தான் தெளிதி நன்மை
சுருதியுரை யாளரெனுந் தூயோ ரென்னு
தாயாகக்கனிந்துகுரு சறையச் செய்த
தனியையினி துற்றுப்பொன் ருட் சாருவாயே.

கண்ணீர்ப் பிலிற்றிக் கருத லினிது. சிலுவை 6-வது ஸ்தலம்.

8. சார்ந்துபெரும் புகழுடைந்த புநித மென்காண்?
டரிசனத்தாற் பெற்றவைப வச்சான் றென்காண்?
சோர்ந்துமுகங் காற்றளர்ந்து ஊசலாடித்
தோட்சிலுவைக் கொண்டுமணற் செல்லுங்காலை
யார்ந்தொருதாய் மடமாது தூசு கொண்டு
ஐயன்முக மெய்துடைக்க வந்த ரூபம்!
நேர்ந்துறக்கண் டுளங்குழைந்து வாடி யேகண்
ணீர்ப்பிலிற்றி னள்ளினிது நீயுங் கொள்ளே.

நம்பிதா ணேடலினிது.

மாற்கு 14 அதி. 32-35. லூக் 22. அதி. 44.

9. கொள்ளுதற்கு அரியதிரு மறைச்சான் றென்காண்?
குணமென்காண்? குணமலிந்த பெருமையென் காண்
பிள்ளைகணம் பான்வருதி சுகிர்த மோக்ஷம்
பெறுதியென்ற கனிவையெவர் பேசற் பாலோ?
கள்ளவிழுஞ் சோலைபுற்று நம்மைக் காக்கக்
கவிழ்ந்து முகந் தரைக்கிடந்து பரத்தைவேண்டி
யள்ளற்படி யீரமுங்கி ரெனவாய் வேர்வை
யார்த்தவன்றண் சிலுவையினி தலர்த்தா ணம்பே.

பொன்னடி தூய்மைப் போற்றலினிது, மத் 8. அதி 26-27.

10. நம்பினருட் டிருட்டுய்மை யென்காண் முன்னே
னவமென்கா ணட்புடைநற் செயற்சி ரென்கா
ணம்பரத்தை மொழியொன்றுற் குழையச் செய்தே
யரியவுமிழ் நீர்கொடுகண் டிறந்து மன்றற்

றம்பதிய ரோடுபலர் களிக்க வாறு
தாழி புனல் ரசஞ்செய்த தருமராஜ
னிம்பர்தலச் சீரளிக்கக் குருசி லந்தோ
விணைந்தவன்றன் பொன்னடிகண் டினிதுபாடே.

பனிவரையந் துளும்பிய பரமனைப் பரவுதலினிது· 90. சங். 2-4.

11. இனிதுபெரும் புகழ்கருணைத் தூய்மை யென்கா
ணைத்தலத்தார் புத்தகத்து ளெழிற்கொள் சத்தாய்
தனியாசித் தனிக்கடந்து முதலீ றில்லாத்
தன்வயமன் வயஞானத் தையனந்த
நனிதளிர்த்துப் பைந்தருவாய்க் கிளைத்துப் பூத்து
நற்கனியா? யக்கனியுண் வித்தாய்ப் பூத
பனிவரையந் துளும்பிகுரு சுறைந்து பாடு
பட்டவனை யினிதேத்திப் பரவு வாயே.

பரன் றிருக்கழலைப் பன்னலினிது. மோசே. 2. அதி. 17.

12. பரந்தவுல கிருளென்காண்? டமை யென்காண்
பவநேர்ந்த விஷயமென்கா ணந்தோ வாதி
வரநிறைந்தோர் செந்திருகான் பரம னிட்ட
வார்த்தையினை மீறிபொசித் திட்டநஞ்ச
முருமுதற்பற் கருவிழிந்து வெம்மைப் புக்கி
யுட்குழைந்து தீநரகுக் குடையராகிப்
பரமிழந்தோர் தமைப்புரக்க வலப்பாற் காயம்
பட்டவன்பொற் றாளினிது பன்னுவாயே.

நற்சுகந் தூய்மை நாடலினிது. எபிரேயர் 12. அதி. 22. 24.

13. பன்னுமரு வுருப்பொருளின் செயற்சீரென் காண்?
பரகதிக்குத் தலைஇவனன் பருக்கு ளொன்றி
மின்னுசின கரமென்ன விதயமாட
மென்மலரை யுடைத்துதவி சாற்றி வீற்றுக்
கன்மனத்த ரிருட்கரைத்து ஒளி புகுத்திக்
கற்பனைபத் துடையமுத்து! வித்தாய்ப் பாய்த்துத்
துன்மனத்தர்க் காய்க்குருசிற் றொங்கி மாண்டு
தூய்மையுற்றோன் றாளினிது சுகந்தேர் வாயே!

வரைபூத்த காலியை வழிபட வினிது. மோசே 22. அதி. 13-14.
மோசே 22. அதி. 17-19.

14. சுகமடைந்தோ ரெவரவர்சௌ பான மென்காண்
டொன்மறையஞ் சொன்னாரி யாநன் னாட்டிற்
றகர்மேய்த்தோ! னாபிரகா முக்குத் தேன்பாற்
றண்ணதிபாய்க் கானானைத் தந்து சீர்த்திக்

சகனவுடு போன்வாரி! யறலைப் போலுங்
காண்முளைகட் பெருகவெனக் களித்தா சீர்செய்
திகபரமெய் வியக்கமம்ரே வரையிற் காசி
யெனத்தருவுற் றிடைந்தவனை யினிது பாடே.
மலராரண் டேய்மை வாழ்த்த லினிது. சங்கீதம் 134-1-3.

வெளி 20. அதி 15.

15. பாடாம லிருந்திடிலென் னந்தோ! ஞானப்
பரனைதிருப் புகழ்ப்பாடிப் பணித்தா ணேடி
நாடாத பிறவிபெற்றென்! சிரகரங் கண்
ணுப்படைத்தென்! வெட்பாலை யெனத்தீ யாழ்வர்
தேடாத திரவியமோ? ரேழுட் பூண்டு
சிரம் வணங்கித் தவிடுதெனவாய்ச் சீர்பணுற்றி
வாடாத மலராரண் டேய் நீழலாற
மரமுறைந்த வனையினிது வாய்மை வாழ்த்தே.

மத் 17. அதி 20. லூக்கா 16. அதி 23.
ஆணிமூன்று லறைபுண்டவன்று ளண்டலினிது.

16. வாய்மையுற! நேருநவ மென்கா ணேங்கு
வரைவருகப் போகவென வழுவொன் றுமாண்
டேய்மறைய மொழியுளது தெளிதி திட்டர்
சுழற்சிதைந்து! கடற்படிந்த துரும்பைப் போன்று
நாய்நரியங் கழுகுக்கிரை யாகி நாறி
நரகடைந்து புலம்புவர்மெய் நனிக னிந்து
ஆய்மறையம்! படிகுருசி லாணி மூன்று
லறைந்தவனை யினிதேத்தி யண்டு வாயே.

லூக் 23. அதி. 27-28.
திருச் சிலுவை யுற்றுனைச் சிந்தித்த லினிது.

17. அண்டிதருத் தோட்சுமக்கப் பெற்ற காட்சி
யழகென்காண்? சீயோனி னரிவை யர்காள்
கண்டுளைந்து புண்ணுளிக் கொண்டு ஐயன்
கதிர்முகஞ் செங் நீராலு முமிழ்நீ ராலும்
விண்டதொடு துண்டர்சிதைத் துதைத்துப் பற்றி
மெய்ப்புடைக்கக் கண்ணருவி யிழைத்த வாறு
தெண்டனிட்டுக் கனிந்துளஞ்சீர்ப் பாடி வாழ்த்திச்
சிலுவையுற்ற வனையினிது சிந்திப்பா யே.

யோவான் 14. அதி 65. மத் 26. அதி. 63.
நிமலநாதனை நேசித்த லினிது.

18. சிந்தைகனிந் துருகாதோ? ரெவர்காண் ஞானச்
செம்மறியைக் குட்டிசிரங் குட்டித் தேவ

மைந்தனினைப் புடைத்தவர்க ளெவர்காண் மெய்ம்மை
வாக்கருள்வீ ரென்னத்திரு! வாய் பேசாது
எந்தையினைப் புநிதமுற்று மனனஞ் செய்ய
வெள்ளளவு மிரங்காவன் நெஞ்சர் வீணே
நிந்தையினைக் கொடிதுனுற்றச் சிலுவை யொன்றி
நீத்தவன்பொற் றுளினிது நேசிப் பாயே.

பூஜித்துநன்று போற்ற லினிது. மத் 13. அதி. 42.

18. நேசமிலா ரடையும்விதி வாய்மை யென்கா?
ணிர்வயமே குடிமண்டி நெடுங்கா லந்தோ!
நாசமுற்று வழலழுங்கிக் குழைந்து தாக
நாவறட்சி யுறத்துயர்பற் கடிப்பான் விம்மித்
தேசடையார்க் கழுதுகணத் தோடு கூடித்
திரிவர்மெய்யே நீகருணைத் தேவ ஞானப்
பூசனையைச் செய்தினிது பாடி நன்று.
பொற்சிலுவை யுற்றவனைப் போற்றுவாயே.

துரையென வியந்து துதித்த லினிது, 2. கொரிந் 5. அதி. 8.

20. போற்றவரும் பாமுகைத்தெண் சுருதி யென்னே
பொற்புளர்க்கும் பொற்பிலர்க்கும் போத ஞானப்
பாற்கடைந்து! காய்ச்சியெடுத் திட்ட விஞ்சைப்
பனியமுதை யூட்டிபவ நோய்க்கொட் புண்ணை
யாற்றிமுழுக் கழுமலத்தைத் துடைத்து வெய்ய
வருநரகின் றுட்பூட்டி யடைத்தோன் றன்னைத்
தூற்றிநெடுந் தோட்சிலுவைச் சுமத்திக் கொன்ற
துரையையினி துற்றுமனந் துதிசெய் வாயே.
உரோமர் 8. அதி. 33.

கொற்றவ னற்றுட் கூப்ப லினிது. மாற் 16. அதி. 15.

21. செய்யாத வினைசெய்தோர் தமக்கு நன்றி
செய்ததென்காண் செம்மறி யைப் போன்று ஞால
முய்யார்க்கு முய்பவர்க்கு மளவில் ஞான
மோதியேயோ? தற்கரிய வுண்மை சாற்றி
மையாரு மேழ்பவ மாழ் கடற்கடக்க
வங்கமென வுற்றுவழி வருநன் மீனைக்
கொய்மாறு தாக்கியுயர் குருசின் மாய்த்த
கொற்றவனை யினிதுகரங் கூப்பு வாயே.

கூப்பிடுஞ் சேவலைக் குலவுத லினிது. மத் 24-37.

22. கூப்பிடுஞ்சீர் மாண்பென்காண்? மெய்ம்மை வேண்டிக்
குருபரனுக் கபயமிடிற் குளிர்ந்து நன்மைப்
பூப்பொழிவான் றட்டிடிற்றுட் டிறப்பன் குன்றுப்
பொக்கிஷத்திற் கொண்டிருத்தி வைத்து ஞான

வாப்பிடுவ தன்றித்திரு! வடியீங் தாள்வா
னம்பரத்தி லிம்பரொடு வாழக் குஞ்சிக்
"கூப்பிடுங்தென் கோழியினை" மாய்க்க நீண்ட
குருசுறைந்த வனையினிது குலவுவாயே.

தந்தையென் றேத்தித் தகைசொல வினிது.
எபிரேயர் 71. அதி. 4.

23. குலவுதிருக் குலமுதித்த வுயர்வோ வென்காண்?
கொற்றவனே யூதகுல மணிவான் றிங்கள்
நிலவுவன்கீழ் வரையுயர்சீர் வரையி லாது
நின்றெங்கு நிரஞ்சனமாய் நீடுஞ் ஜோதிப்
பலவுருவாய்க் குலநலங்க ளின்றி யேக
பரமுடைத்துக் கரம்விரித்து உருத்தலோடு
தலம்விளிக்கக் குருசிலரும் பாடு பட்ட
தந்தையினை யினிதேத்தித் தகை சொல்வாமே.

1. நாளாக 16. அதி. 34.
புண்ணியனென்றே பூஜித்த லினிது.

24, தகைநிலவு! குளிரருமா ணவங்க ளென்காண்
தயையனந்தங் திரண்டுருவாய் ஜனித்துப் பாரு
ணகைநிலவப் புகரொழித்து நம்மிற் கூடி
நஞ்ஞான விதைத் தெளித்துப் பொய்ப்பற் றேம்பிச்
சுகநிலவு மாந்தர் தமக் குறுதி பொய்யா?
சுகம்பெறுதி யெனத்துண்டர் சுசிகண் சீறிப்
புகைநிலவு உயிரள்ளும் படிக்குக் கொன்ற
புண்ணி யன்பொற் றளினிது பூசிப்பாயே.

சீர்திரு வுளத்தைச் சேவித்த லினிது. மாற் 14. அதி. 72.

25. பூஜித்து! அடைந்தபுகழ் பெருமை? யென்காண்
பேதுருவெ னுஞ்சீடன் புலன்க ளிந்து
ஆசித்து! உயிரயிர்வே னும்மோ டென்று?
ஞமூன்று முறைமறுத லிப்பை யென்றிச்
சிஷன்முனஞ் சிறையழுங்கித் துஞ்ச தேவத்
தூதுவனைக் கொண்டுசிறை மீட்ட ஞானத்
தேசிகனை மரத்தறைந்து கொன்றீ ரென்னே?
திருவுளத்தை யினிதேத்திச் சேவிப்பாயே.

வெளி 2. அதி 7. யோவேல் 21. அதி 13. 1 கொரிங் 15. அதி. 1.
அற்புத னற்கழ லடைந்திடி லினிது.

26. சேவிக்கப் பெருமை யென்காண் சேவிப் பார்க்குத்
திருக்கருணை யுறுமெய்ச்சே வகனுய்த் தோன்றிப்
பாவிக்கு! இனிதுமருந் தருள ளித்துப்
பண்பினுக்குத் தக்கபடி பரிசீந் தாதி

சிவிக்குங்! குருமணிவின் பரதி சென்னுஞ்
செல்வசெம்பொற் கிரிநிலவ செய்து நம்மு
ளாவிக்கே? யாவியைவன் சிலுவை தந்த
வற்புதனற் றுளினிது வமைதி கூறே.

மாற் 2. அதி 39-40. 2-கொரிந் 5. அதி. 8.

தினே யெண்ணித் தெளிந்திட லினிது.

27. அமைதியுற்றுக் களித்தநவ! மென்காண் ஞான
வரியவுருக் கருமலித்து எழிற்கொட் காலை
மமையெலிச பேத்தகத்தின் கருக்க ளித்து
மரிக்கருவி லெழுந்தவனை வாழ்த்த மண்ணோர்
சுமையெடுத்து அலகைசிரந் தகர்த்து மோட்ச
சுகிர் தநலங் கொடுக்கவுற்ற துரையென் றுனின்
றெமைப் புரக்க மரக்குரிசி லறைய மாண்ட
விறையையினி துற்றுதினே யெண்ணு வாயே.

மத் 28. அதி 27.

பொறுத்தானைப் போற்றி புகழ லினிது.

28. எண்ணாது செய்தவினை யென்கா ணூற
செனுமுனிவ ஞேடுஉகாய் பாவுஞ் சீறிக்
கண்ணழலை யெரியவரு கிருந்த யூதர்
கசையடித்த தன்றிக் கன்னத்தறைந்துமோதி
பண்ணாத நிந்தையினைச் செறுத்தி யூதப்
பதியரசே வாழ்கவெனப் பலவாய்ப் பாடிப்
புண்ணாக்கி யுடலைகுரு சறைந்து கொல்லப்
பொறுத்திருந்த வனையினிது போற்று வாயே.

மாணுரைகூறி வழுத்துத லினிது' மத் 9-20-22.

29. போற்று மெழின் மகிமையென்காண்? பெரும்பா டுற்ற
பூவைக்குர லொசியாது மனன வண்ண
மாற்றித்தகை நிலவுறும்பைங் கழலைத் தீண்டற்
கானவளோ? வென்றஞ்சி விளிம்பைத் தீண்டி
யேற்றியிரும் பிணித்தொலைத்தாட் பரம நாத
னெனத்தொட்டா ரெவரென்ன விறைஞ்சி யெங்குந்
தூற்றினமெய்ப் பரமனின்று சிலுவை யொன்றித்
துஞ்சியமாண் டுரையினிது சொல்லு வாயே

பெருமான் வளமைபேசலினிது. மத் 27. அதி22. மாற்15. அதி 11

30. சொல்லலர்ந்த நவங்களென்கா? ணசரை ராஜ
துரையைப் பிலாத் தகங்கொடுபோய்க் குற்றங் கூறிக்
கொல்லவிடைத் தருதியென வற்ப குற்றங்
குறைகாணேன் பரபாசைக் கொல்வீ ரென்னக்

கல்மனத்த ரவனைவிடுத் திவனை யந்தோ!
    கையளியு மென்னகரங் கழுவி யொப்பு
வல்லவனைக் கொடுத்தனன்மெய்ச் சிலுவை யேறி
    மாய்ந்தவனை யினிதேற்றி வளமை பேசே.

மாற் 15. அதி. 5.

அருந்தாணை அடைத வினிது.

31 பேசாது கனிவுற்ற மாட்சி யென்காண் ?
    பேதமையிப் பிள்ளைகட்செய் பிழைகொ ளாதென்
ராசாதி ராசனேநீர் பொறுத் திரக்க
    நட்பினைச் செய்தாளுகென நாத னூர்க்க
கூசாது பலயூதப் புலிகட் டுள்ளிக்
    கொக்கரித்துச் சாட்டைகொடு சாடி மோனத்
தேசானு பவனெனக்கண் பாரா தந்தோ?
    சிலுவையறைந் தனரினிது சேர்வீர் தாளே.

இரவியென் றுளத்து ளேத்த லினிது.

மத் 26. அதி. 26-27.

32. சேருடி யருவிநிறைந் தொழுகிப் பாய்ந்த
    செந்நீரா லுறுநவங்க ளென்காண் சீர்த்தி
யாருத பவநோய்ப்புண் ணுற்றற் குற்ற
    வரும்புனலம் தசையுண்ணு மப்ப முண்மை
தூருதீர் கைக்கொள்ளக் கருணை ஞானச்
    சுகிர்தமுறாந் தூய்மறையச் சொற்சீர்க் கந்தோ!
மாருது நிகழ்வண்ணங் குருசி லேறி
    மடிந்திரவி யினையினிது மனத்து ளேத்தே.

மெய்ச்சீர் மகிமை விளித்த லினிது. மத் 26. அதி 53.

33. உள்ளன்பு ளான்கருணை யென்கா ணென்னி
    லுறுதியுறு வானிறையி லுறுதி தேர்ந்து
விள்ளன்பின் சீரொடுநன் மெய்ம்மைக் காண்பான்!
    விண்ணவரைத் தூதாண்டு வியப்ப தன்றி
யெள்ளளவும் பொய்யொருவ! தில்லை கண்டீ
    ரெண்ணியதோ? கைவல்ய மாகு மென்ற
வள்ளலவர் பிள்ளைகளை யினிது மீட்க
    மரக்குருசி லுறைந்தனன் மாண் மகிமைப் பாரே.

ஆதியாகமம் 4. அதி 5 நீதி 20. அதி. 1.
தெளிதி பாடிச் சேரலினிது. 23. அதி 29-32.

34 பாரமென்காண்? பாரிருண்ட விஷய மென்காண்
    படுகொலைப்பொய்! களவுநிந்தை நறைய ருந்தற்

சேரதிரண் டவைச்சுமையே சிலுவை யாகி
தேவரீர்! தமதுபுயத் தேறவேயா
கோரவிரு ளெனுமஞ்ஞா னம்மி ருப்புக்
கூராணிக் குறடுசுத்திக் கொடுமை நேர்ந்துஞ்
சேரவரு வீரெனவாய்! இனிது வேண்டி
சிலுவைமரித் திட்டவனை தெளிதி பாடே.

கருதிக் கனிந்து களித்த வினிது. மாற் 15, அதி. 22.

35. தெளிவின்றிச் செய்தசெய லென்காண் ஞானத்
தேசிகனைக் கொல்கொத்தா வரைக்கொ டேகி
யளியெனவாய் மொய்த்துஇருப் பாணி மூன்று
லருகரங்காற் றுக்கித்தருப் புரட்டிச் செங்கண்
சுளிமுகத்தர் வெருவிதீம ஸெத்தீ சென்னுஞ்
சோரரிரு புறங்கறங்க நடுவி னட்டிக்
களிப்படைந்தோர் தமைபுரக்கக் குரிசி லொன்றிக்
கனிந்தவனை யினிதேத்திக் கருது வாயே

மத் 27-34-35.

உத்தமன் பொற்று ளோருத வினிது.

36. கருதியமன் னிரக்க மென்காண்? தாகமுற்றுக்
கனிந்தருளை யுகுத்துமொழிக் கழறத் தீயர்
அரியவிடங் கலந்தபழ ரசத்தைத் தோய்த்து
அருந்தெனவாய்க் கோற்பூட்டிக் கொடுக்க வையன்
மருந்தெனவாய்! தெரிந்தருந்தி யுமிழ்ந்த னர்மெய்
வன்னெஞ்சர் சிலுவையைநீத் திழிந்து வாவென்
றுரைகுளறக் கனிவுற்றுக் குருசிற் பூத்த
வுத்தமனை யினிதேத்தி யோரு வாமே.

தெண்சீர்ப் பற்றுல் சேரவினிது.

2-இரா. 6. அதி. 17. யோவா 20. 34.

37. ஓர்ந்துணரா தொன்னலர்கா ளடைந்த காட்சி
யுண்மையென்கா ஞேர்கண்குரு டுறுவன் னெஞ்சு
னேர்ந்திருண்ட மொழிகொடெரி யீட்டி யாலே
நிமலன்விலாக் குத்தசெந்நீ ரருவி யோடி
யார்ந்ததுளி விழத்திறந்து சொரூபங் கண்டு
அழுதுகண்ணீர்ப் பிலிற்றியையே நின்செந் நீரால்
தீர்ந்தகழுக் காறெனவாய் இனிது பாடிச்
சிலுவைகதி யடைந்தனனற் றெண்சீர்ப் பற்றே.

சிலுவைத்தியானஞ் செய்யவினிது. லூக். 9. 23.

38. சீர்பற்றென் கருணையருட் செயற்பற் றென்காண்
சேயரரு வினைக்கருஞ்செம் மறியாய்த் தோன்றிப்

பேர்பற்றோ டுளுற்றிபுகழ்ப் பற்றுட் கொண்டு,
　　பெருமாந்தை யழுங்கிப்பலி பிறங்கி மேனி
யார்பற்றான் வாக்கேலி லாமா வென்று
　　ஆவியயிர்த் தனனன்பின் தயையே திஞைமப்
தேர்பற்றுற் றீமஸெத்தி சிடையி னின்ற
　　சிலுவையினை யினிதேத்தித் ஜெபஞ்செய் வாமே.

திருத்தாண்முத்தஞ் செய்யலினிது. மத். 27. அதி. 51-52.

39. செய்யதிரு மேனியுயிர் நீத்த பின்னர்
　　திகழ்ந்தநவ வைபவங்க ளென்காண் மாட்சி
வெய்யவனு மொளிநலிந்து திரைகி ழிந்து
　　விரிஞால மதிர்ந்துகிரி பிளந்து மண்ணுட்
டுய்யவரு மெழுந்துதுதி கூற ஞானச்
　　சூரியனை யிறக்கிமரிக் கரத்தி லீயத்
தெய்வசெய லெனக்கருதிக் குழைந்து முத்தஞ்
　　செய்தனர்மெய் நீயினிது செய்கு வாயே.

கல்லறைச்சேவைக் காண்டலினிது. மாற் 16. அதி. 40.

40. ஆய்மரிசா லோமியரு மகுத லாளும்
　　அரிமத்தி யூரானு நீக்கோ தேமு
நேய்கரங்க ணீவிநறு தயில மூற்றி
　　நீர்மையுரு வர்ணபரி வட்டங் கோலித்
தூய்பரனைக் கவிழ்ந்தழுங்கி மனனஞ் செய்து
　　சுவாமிதுஞ்சி னீரெனவாய் தூக்கிச் சென்று
காய்பாவா ஞசனினி தெழின்மாண் கொள்ளக்
　　கல்லறைச்சே மித்தெழிற்கா வலைக்கொண் டாரே.

## வாழி விருத்தம்.

அருட்பரன் வாழி சேசு அன்னமரி வாழி சூசை
மருகரம் வாழி ஞான வான்குழாம் வாழி பாப்பு
குருக்குலம் வாழி மன்னர் குடிராய புரிசீ ரோங்குந்
திரித்துவ "ஞானத்தியானத் திருச்சபை" வாழி மன்னே.

## முற்றிற்று.

மத். 27. அதி. 11.

இந்நூல் இனியம் 28-வது கவியில்

யூ த ப் ப தி அ ர சே எ ன் ப தா ல்,

## த சா ங் க ம்.

### திருச் சைலம். லூக் 2. அதி. 6-7.

நேரிசை வெண்பா.

பொற்பூத் தருட்கொழிக்கும் பொன்னங் கிரிவெல்லை
விற்பூத் தருளே விளைத்துதிருங்—கற்பூத்த
மெய்யானை வேண்டுமினே வேந்தர்கு ழாங்களின
ருய்மாறு கண்டே யுவந்து. (1)

### திரு நாடு.—மத். 26. அதி. 32.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தேடரு ஞான சோதி சேயெனக் கதித்துச் சூசைக்
கோடரு நிழலில் வீற்றுக் குறையறப் போக்க வெண்ணி
வீடரு ளும்ப டிக்கு விளங்கின னிறைக் கலிலை
நாடனே நாட னல்லான் நவிலுதற் கிலைமண் மீதே. (2)

### திரு நகர்.—மத். 26. அதி. 71. லூக். 4. அதி. 10.

நேரிசை வெண்பா.

மாணார் மதிக்கு மலிநசரே மாநகரான்
சேணார் தழித்தேத்துஞ் செம்மணியம்—வீணாளைப்
போக்காது வாழ்த்துமின்காள் பொய்ப்போம் வினைபறந்து
தாக்காது காக்குந் தலை. (3)

### திரு நதி:—மத். 3. அதி. 13.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிய விருத்தம்.

போனமுற் றொளிருந் தூய முனியரு ளப்பர் மாண்பு
வானமே மலிந்து மண்ணின் வழிந்தவிழ் தயையான் ஞானத்
தானமே பெற்ற தெண்ணீர்த் தண்ணதி யுடைய கோமான்
தேனலம் பயக்க வன்று செற்பொழிந் தனகாணம்மா. (4)

திருப்பரி.—யோவா. 12. அதி. 15.

கலி விருத்தம்.

வேத மாமுடி யேறிவி ளங்கின
ஞாத லாலே யவையவா நீத்துக்கோ
ஞதன் வேசரி யூர்ந்து ஜெருசலே
போத லாதவன் பூவடிப் போற்றுவாம். (5)

வேசரி-என்பது கோவேறு,

திருக்கரி.—மத். 26. அதி. 64.

கலி விருத்தம்.

பார்நிறைந்த பதியுள் வெளியொன்றிச்
சீர்நிறைந்த சிறப்பின்மை யற்றுயர்க்
கார்நிறைந்த விபமென்ன வேறிவா
னூரடைந்த னுவப்பி லுவப்பதே. (6)

திரு மாலை.—பச்சிமகாண்டங் காண்க.

வேறு விருத்தம்.

வேலைக் கவிழ்க்கு மணிவங்கம் வினையோ கவிழ்க்கு நரகழல்வாய்
நூலைக்கவிழ்க்கு மடிவின்மை நோயோ கவிழ்க்கு முடல்வலியை
கோலைக் கவிழ்க்கு மரசுரிமை குணமோ கவிழ்க்குந் துன்மதியை
மாலைக் கவிழ்க்குந் தியானஜெப மாலையம்பான் மும்மணியே. (7)

திரு முரசு.—வெளி. 8. அதி. 6.

விருத்தம்.

அருளா வியல்வரி வேதமொலி
யன்ப ரகமட் டுமே கேட்குந்
தெருளா ரிடுநற் றியானமொலி
சேனே கேட்குஞ் செல்வினொலி
யிருளே யிடிக்க யோசனைக் கேட்கு
மிறந்தோ ராழ்மண் ணறைகேட்கா
சுரரே மரித்தோ ரெழவூதுந்
தொனியெக் காள முரசுடையாய். (8)

திருச்சேனை.—வெளி. 5. அதி. 10. தானி. 7. அதி. 10.
103-சங். 20. யோபு. 38. அதி. 5. 6.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மாமுனிக்குச் சேனைபுற் றூர லிந்து
மணிநாக முயர்த்திபுரை நாகந் தாழக்
கோமகன் பார்வோனை யங்குவற்பு றாத்திக்
குழா மிஸ்ரேற் சிறைமீட்டுக் கொண்டான் யாக்கோ

பூமகளை யரணுக்கிக் கோற்கை கொண்டு
பொன்போள வர்க்கபகு திச்சீர்பெற்று
மாமரிக்குச் சேயெனவா யுற்றேனுக்கு
வான்சுரரே சேனையென வாழ்த்து வீரே. (9)

திருச்சிலுவைத் துவஜம். பச்சிமகாண்டம் காண்க
எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தேசுறுமா மறையுரைசீர் பெற்றான் வெற்றித்
தினகரனை யேழடிப்பின் னிழுத்துப் போரில்
யோசுவனைச் ஜெயம்பெறச்செய் வித்து மீனம்
யோனுவைக் கரையுமிழச் செய்து தூய்மை
மீசுரரைத் தூதுரைக்கு ஏவற் கொண்டு
வியனுலகெ லாங்களிக்கச் செய்து துட்ட
வாசுகியாங் கழுதருவை நரக டைக்க [னே.
வலுக்கொண்டான் ஜெயசிலுவைக் கொடிக்கொண் டா

தசாங்கம் முற்றிற்று.

---

சர்வேஸ்வராய நம:

# மரி பரிணய வல்லப அமிர்தம்.

கடவுள் வணக்கம்.

மணிப்ரவாள சுலோகம்.

ஸ்ரீ நித்யார்த்த போத நின்மல வின்யாஸ
தத்வஸ்வரூப ஸாமினே நமஸ்து.

---

## நூல்.—தயாப்ரகாசம்.

1. பரம்! பரம் தயாப்ர காசம்
மரி பரிணய வல்லப வம்ருதம்
சுவர்க் கானந் தாற்புத மரியே நமஸ்து.

2. ஆத்ம ரக்ஷாம் ருத பாஷி
மகத் வாக் யோப தேஸஸம் பூரணி
தயா சேஷ மரிதிவ்ய சரணார விந்தே நமஸ்து.

3. வேத ரஸமஸ்த வஸ்துவி லக்ஷண வைபவி
திவ்ய் காத்ர தேஹி திவாகர பூஷணி
சந்த்ர புஜஸ் மரணையோ மர்யே நமஸ்து.

4. தவிது ராஜ வம்ஸ புண்ய வம்ருதம்
ஜென்ம தோஷ ரகித கலாபம்
மரிப்ர காச பரிணய பத்ம நமஸ்து.

5. திவ்யாங்க மகீத்வப்ர காசம்
ஜனஸங்க ஸுப்ரதீபோ மான்மி யோமயம்
சுரரார்ச்சித பூஜித மர்யே நமஸ்து.

6. ஜெகத் விலக்ஷண வபூர்வ வித்யார்த் தம்
நவீன கட்க ஸம்மார விரார்த்தம்
மரி வ்யோம நாமாம் புஜ நமஸ்து.

7. தயா ஸர்வஸ் தான ப்ர மூகாரணி
ஸுவர்க்க பூஜி தாற்புத விக்ரஹம்
வந்தே பிரண வானு மரிபோத நாமோநமஸ்து.

8. அனந்த ஞான மயா மந்த்ர வாக்யமாலி
அதிதூத பலத்வ பத்ராஜன மூக்த விம்மா ஸனி
ஜெயராக்கினி திவ்யார விந்தே நமஸ்து.

9. ஸர்வார் யோப தேஸஸ்வஸ் ஸொரூபி
நம்த மாங்கல்ய குணகண கல் யாணி
புவன கோடி மாத்ரு மரிபங்கஜ நமஸ்து.

10. அநாதி மூக்தேய நின்மலோற் பவ அசரீரீ
ஸுபாங்க மங்கள ரமணீ
பவ ஸம்மார கட்காய மர்யே நமஸ்து.

11. நவீன ஜென்மான் மோதய வப யஸ்தி
தன விலாஸ வைபவ நடன சுயமஸ்தி
பரத்யான வாஸ சௌபாணி யாயே நமஸ்து.

12. அகில ஸேத ஞேத்ஜீவ ரம்யம்
தினேஸ் வர்யஸ் காந்தம்!
வ்யாயோக நாம தேஸஸ்ய மர்யே நமஸ்து.

13. ஸதோய ஜீவ்ய சௌபான ஸம் ரக்ஷணி
ஸத் பாஷ்ய சங்க விராஜேஸ் வரி
துத்ய கீதா விநோத ஜன்மான்யோ மர்யே நமஸ்து.

14. பரம ஹம் ஸஸ் ஸொரூபி
ப்ரக் ஞான போத ஸத் வம்ஸி
ஜெயா நித்ய கௌரவ்ய மர்யே நமஸ்து.

15. ஜென்மானு சார ஸாபல்ய நாஸ்தி
ஏஷ மரிஞான தியான மார்த்தி
ஸுவக்கீன் றவபுத்ரீ கஞ்சே நமஸ்து.

16. இரஜிதயக் ஞோபகிரீ டேஸ் வரி
ஜெயா பரி! சுத்தாய கன்னி காயி
தேவா ரம்ய மரிநாம பத்ம நமஸ்து.

17. தயா க்ஷீரார்ண ஸத்ப யோநிதி
மகா தேவ பூஜித கண்ய ஸகாயி
நிஜஸ்தம்ப ஸம்பவார் யோமர்யே நமஸ்து.

18. பரோப கார ஸகாஹி த்வேஷ
நாகபர்யங்க த்வம்ஸ நிர்த்தனி
முமூட்சு வாஸத் யான தீக்ஷித மர்யே நமஸ்து

19. ஸர் வாக்னே ப்ரபோத கர்த்தவ்ஹி
தரேந்த்ர வைபவ முக்த நடனி
ஷித் விலாஸ ஸம்பூரண மர்யே! நமஸ்து

20. இகமுக் தார்த் தாதீன க்ஷீர ஸஸ்யம்
ப்ராணுக்ரஸ் திதோதய தரிசனம்
ஜனர்ச் சன ஸுவர்ணக் ஞோப மர்யே நமஸ்து

21. ஆத்ம தியாஜ்ய த்யால போதப்ர ஸன்னி
தயா நேத்ர ப்ரகாஸ தீப நக்ஷேத்ரி
மரிஸ் தௌதிய ஸம்பவாமி யாயே நமஸ்து

22. ஸ்ருதி யுக்த ம்ருது பாஷி க்ர்பா
நிதியுக்த மோக்ஷா ரோகணீ
நிவே தார்ப்பண நின்மல மர்யே நமஸ்து

23. தேவ தாந்த்ரத்ரய திவ்யோற் பவி!
ப்ரணு லய மோனப் புண்ய வர்த்தனி
சுபஸ்வீகர கல்யாண மர்யே நமஸ்து

24. ஆன்மோ மயஞானப்ர வாக தீர்த்தஹி
அம்ஸஸ் வஸ்ஸொரூப வின்யாஸ முக்தனி
ஸஹி களாத் பவி பாதபத்ம நமஸ்து

25. தயா மாத்ருதான ஸம்ப வார்யோதயம்
பரவஸ்ய போத தத்வ ஜீவா வைக்யம்
யயாசுர ஜனஸேவ்ய மர்யே நமஸ்து

26. விஜயாம்! விஜயாற்புத புண்ய லக்ஷணும்!
விலக்ஷணும் தனைசுவர்ய பர்வதாம்
நிஜானுக்ரஹ மங்கள பூஜித மர்யே நமஸ்து

27. எதீஸ்வரமய வாக்யோப தேஸ வம்ருதம்
க்ருபார ஸமஸ்து வஸ்தாவிழ்த பவரோகாம்!
நாஸ்திதய போக்ய மர்யே நமஸ்து.

28. ஜெகத் ப்ரகாஸ வர்த்தனி
ஸத்ஸங்க ஏஷ பாஷியாம் ரூபி
திரீத்வ ஞான தியாஞேற்பவ மர்யே நமஸ்து

29. மோக்ஷைஸ்வர்ய ஞான பூஷண ஜனர்த்தனி
மகத்வ தேக காத்ர கண்ய கல்யாணி
தபத்ரய ஸம்ப வாமியோ மர்யே நமஸ்து

30. தேவாம்ஸஸ்வஸ் ஸொருபீயாம் ரூபி
மனுவாக்ய விண்ணப்ப ஸங்கபாஷியாம் பாஷி
பரம க்யான ப்ரகாச மர்யே நமஸ்து

31. மகாதேவ தாந்த்ரத்ரய
ரகஸ்ய ஞான பத்மாஸனி
எவ்வனரூப ப்ரகாஸ மர்யே நமஸ்து

32. அதீத மயவின்யாஸ விலக்ஷண
நம்தமாங்கல்ய குணகணம்
ஏகாநேகஸ்வ ரூபியா மர்யே நமஸ்து

33. பரமம்ஸ ஸ்வரூப த்யான மனு கண்யம்
த்ர்யேகத்வ நாம பூஜிதம்
ஸதோதய ஜீவைக்ய மர்யே நமஸ்து

34. த்ருமந்த்ர வாக்யோபதேஸ விக்ரஹம்
பவநிவாரணப் படிகஸ் தூபியம்
குரூர்த்த மார்ய நமோமய மர்யே நமஸ்து

35. மரிநாமோஸ் மரணைத் யான வர்ஜிதம்
ஸகல புத்ர பாக்யோப நிஜித ஸம்பவம்
க்ர்யாநேக பூஜித மர்யே நமஸ்து

36. இராஜ வம்ஸ திலக தயா சந்த்ரம்
நிஜாங்க வாஸ நிர்த்தன பிரீலியா மர்யே
பரமேஸ்வரி பங்கஜ நமஸ்து.

37. ஸ்வயம் ப்ரகாச லக்ஷணக் கிருபா ரண்யாம்
பவரோக நிக்கிரஹ ஸங்காறபுதாம்
சமஸ்தமக வாக்ய பூஜித மர்யே நமஸ்து.

38. மரித்யான புண்யம் மரித்யான ரண்யம்
மரித்யான கண்ய ரக்ஷண்யம்
மரித்யானப்ரா வண்ய மர்யே நமஸ்து.

39. மரிநாம தியானே சந்த்ரம்
மரிநாம தியானே மந்த்ரம்
மரிநாம தியானே ஸ—ந்த்ரம்
மரிநாம தியாஞர விந்தே நமஸ்து.

40. மரி ராஜ ஸங்க நித்யம்
மரி ராஜ ஸங்க ஸத்யம்
மரி ராஜ ஸங்க துத்யம்
மரி ராக்கினி ப்ர்யே நமஸ்து.

41. மரிப்ர காஸே தத்வ லக்ஷணம்!
மரிப்ர காஸே வித்வ லக்ஷணம்
மரிப்ர காஸே ரூப லக்ஷணம்
மரிப்ர காஸே மரியே தோமாஸ் நமஸ்து.

முற்றிற்று·

கன்கொடை.

திரு! சிராப்பள்ளி.

கனம்! ஜோசேப்பு மேஸ்திரியா ரென்று வழங்கிவரும்
ம-ள-ள-ஸ்ரீ, ந. வீரப்ப பிள்ளை யவர்கள் மீது,
இந்நூ லாசிரியராகிய
ம-ள-ள-ஸ்ரீ, ச. கி. தோமாசு பிள்ளை யவர்களியற்றிய
அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

தென்கொடைமா ணருட்கொழிக்கும் வள்ளல்சிரா பள்ளியினுட்
சீர்த்திவாய்ந்த
பொன்கொடைக்கொள் ளலங்காரன் குவளைப்புயன் நச்சியப்ப
பூபனீன்ற
மன்கொடைக்கொள் தவப்புதல்வன் "வீரப்ப பிள்ளை" புகழ்
வரம்பி லீந்த
நன்கொடையே விணிதுவந்து பெற்றனம்பூ வாழிதமிழ்
நயஞ்சீர் மன்னே!

# சிலுவை த்யானப் பாதை.

கலி விருத்தம்.

இராகம் - பண் - திரிபுடைதாளம்.

கருத்தவிழ்ந்த விடத்து மலி கதிர்
கஞ்ச நெஞ்ச முகமுடைக்கு மெழிற்
பெருத்த மாமறை யின்முடிக் கோலும்பூ!
பேசுஞ் ஞானப் பேரின்பப் படிகப்பொன்
பொருத்த முட்சுடிகைக் கொண்டவண் சிரம்
பூசுரர்க்குல ராஜப்ர பன்னத்வ
திருத்துவத் திரண்டாமா ளென வந்தச்
சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (1)

வாரியூர்ந்த வனச மலர்ப்பதம்
வண்டெனச் சூழ்ந்து மொய்த்துச் சதாநிதம்
கோரி வேண்டிக் குருமணிப் பாலருட்
கொள்ளு தற்குக் குணத்தை நிறுத்தியே
பாரீர்ஞான வமுதத்தை மாந்த பாழ்
பாச நீறுங் கண்டாயுப தேசமே!
தேரீர் தூய்மைத் திரித்துவ மொன்றெனச்
சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (2)

ஏகதற்பர மானப் பரஞ் சுட
ரெங்குந் தங்குந் தங்கவிக்ர கத்தையுள்
ளாகம் வாழ்த்தி யமிர்த கனேக்கட
லாழ்ந்தி யந்தோ அகம்படை யாதுநல்

யோக நிட்டையைச் செய்து அவாவற்று
    யுண்மைத் தேரித் தெளிந்து நிலைபெறத்
தேக வியோக மடையா முனந்திருச்
    சிலுவையை சேவை செய்யலாம் வாரீரே! (3)

பூணுலாவியே போதஞ் சொலுங் குரு
    புண்யனே விரட்சண்ய தயா நிதி
நாணு மென்னையே மீட்பதற் காய்புவி
    நாடி வந்தோய்! நலிந்த சொருபத்து
ளாணும் பெண்ணுநீ! யன்னைநீ! தந்தைநீ!
    யாருலட்சண ரூபத் துளாணே மாண்
சேணு வக்கக் கருத்தி லிருத்தியே
    சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (4)

சேற்றி னட்டபுற் கம்பத்னத மானுவான்
    செய்த தீவினை வேரறுப்பட் டருட்
காற்றில் நீத்திட வாய்மைக் கருதியே
    காரணச் செயற் கட்டளை கொண்டுமே
ஆற்றின் ஞானுப தேசத்தைப் பெற்றநின்
    னன்பின் காட்சியை யாரறிவர் திடந்
தேற்றிக் காக்கவே வந்த திரித்துவச்
    சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (5)

வானரும்பி மணி கொழித் தாருஞ்சிம்
    மாசனப் படையாளர் வந்திக்குந் தண்
மீனரும்பிய வெண் மதியேமறை
    வீற்றப் பூமுடியானைப் பண் பாடியோ
யூனரும்பிய வாழ்க்கைத் துகட் பட
    யுள்ள மார்த்துப் புலனை யடக்கியே
தேனரும்பிய வாசக் கோலான் கரச்
    சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (6)

ஐயம் வேண்டா மணிகலன் வேண்டாந்து
    யாடை வேண்டா மதிபுகழ் மாட்சியான்
னைய வேண்டா நளினத் திருமுக
    நாட்ட வேண்டாம் நடலை வேண்டாமிடர்
பொய்யும் வேண்டாங் களவுகட் காமச்சொற்
    போதை வேண்டாம் புநிதநிதி க்ருபை
செய்ய மாநில முற்றத் திரித்துவச்
    சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (7)

சேவையோ குருதீக்ஷை பெறற் கருட்
    செய்யு மேழு திரவிய மென்னுந்தண்
பூவைக் கொட்டி மணமெழவே யுள்ளம்
    பூத்துதிர வவா வுடுக்கும் பவப்

பாவை பொன்னொடு மண்ணைக் கவர்ந்திடாப்
பற்றைப் பூஜை விரத வானந்தத்தைத்
தேவை யென்றூட்டு விக்குந் திரித்துவச்
சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (8)

பத்தியோ? விரதத்தைச் சிரத்தையைச்
பற்றி நின்ற பாத்தை யருளியே
முத்தி யென்னுஞ் சுகநிலை வாழ்வொடு
மோன வானந்தங் கொள்ளுத லாகச்சீர்ச்
சித்தியைத் தருஞ் சேணிலவும் பரச்
சேதனர்க் குழாந் தேன்மொழி யப்படி
தித்திக்குந் தூய்திரித்துவ மென்னும் பொற்
சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (9)

செங்கையா லளகத்தை யவிழ்த் தடி
தேடி நாடியே! திவ்ய பரிமளம்
பொங்கி வெள்ளமே போகக் கழீஇயே
பூஜை முத்தங் கொடுத்துத் துடைத்தருண்
மங்கைப் போலுங் கவிசம்ப்ர மன்தோமாஸ்
மனன முத்தங் கொடுத்திடற்குப் புவி
திங்கட் கோடி போலுற்ற திரித்துவச்
சிலுவையைச் சேவை செய்யலாம் வாரீரே. (10)

## திருக்கபாலமலை விண்ணப்பம்.

அற்புத நாம விஞ்ஞானப் பிரகாசனே யாதி யநாதி
யரூபியுரு பொலிந்தார்த்த விடத்துட் ப்ரக்யாதி
கற்பனை பத்துரை கல்வி லளித்துமெய்காணு! முதிர்சேணு
காட்சி மலித்த விசேடமெவர் சொல்வர் பாணு
துற்பவசற் பனைக்குட்பட்ட வென்னின் நீதூயே! நற்றூயே
சொந்த முனையன்றிக் காணேன் ப்ரபஞ்சத்தில்! தூநீர்
தற்பதச் சேவைக்கு அன்ற டிமைவலக்கள்ளன் நல்லவுள்ளன்
தன்னையாட் கொண்டதயை கொண்டெனை காத்தாட் சாமி. (1)

தத்துவ சாகரத் தெப்பமுடி சுப்ர தீபா! பிரதாபா!
தஞ்சக்குழாம்புகழ் தெய்வமே என்னில ரூபா
வித்தக நற்கவசங் கோலிக்கட்டும் பொன்னூலா! மாமூலா
வேதாந்தப்பாற் பொங்கிய வெள்ள மோடுமெய்த்தூலா
அத்தமுன்னத்தமாய்க் காணப்படாத நான்பாவி! வேண்டிகூவி
யாரிடஞ் சொல்லற்கு ஆர்ப்பரிப் பேன் ஜெகஜீவி
சத்துருச் சேவைக்குக் காணப்படா வலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னை யாட்கொண்ட தயைகொண்டெனை காத்தாட் சாமி. (2)

J49242

ஆனந்த ஞான வதீதப் பனிவரையானே! ஸ்ரீமானே
அப்பனே முத்தலத்தாளுஞ் செங்கோற் குடையானே
பானந்த வாசப் பரிமளத்துட்குளிர் தேனே! சுடர்பானே
பம்பியருந்தியே கும்பிக்கப்பாடச் செய்வானே
ஊனந்த சேவைக்கு! உள்ளும் புறம்பு நீப்பானே! பூப்பானே!
புட்பற்றுடையார் சீர்சொற்படி யேற்றுக் காப்பானே
தானந்த மாமலைத் தானத்துறை வலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னை யாட்கொண்ட தயைகொண்டேனை காத்தாட்சாமி. (3)

கட்டற்ற ஞானக் கருத்தி னருட் பிரகாசம்! விஸ்வேசம்
கட்டுக்குட் பட்டிடிற் காக்ஷிகிடைக்குந் துவேசம்
ஒட்டாது தூர்ந்தழிந் தூஉகெட்டுப் போகுமுல்லாசம்! சொல்நேசம்
உன்னத மாமணி மேடையை நல்கு முப்பாசம்
சொட்டாலே! துட்டாலே! கிட்டாதந்தோ வருமோசம்! இடர்நாசஞ்
சோர்ந்தடி வீழ்ந்து கிடந்தவர்க்குண்டு! பதேசம்
தட்டாமற் பெற்றக் குருமணியாம் வலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னை யாட்கொண்ட தயைகொண்டேனை காத்தாட்சாமி. (4)

ஆளடி மைப்பட்ட நாள் நல்ல நாளெனக்கேடர்! கொடு மூடர்
ஆரறிந்துய்யப் போகின்றார்கட் பன்னிரு சிடர்
வேளை வணங்கியே தன்னிலுருகி மெய்கண்டார்! மறைவிண்டார்
விஞ்சையே புத்தகத்துள்ளுரை தித்திக்கப் பண்டார்
நீளுரைக் கைப்பெழா வண்ணப் பண்ணனதுநேர்த்தி! மனப்பூர்த்தி
நீர்மையே தூய்மைத்தலம் பெறற்காயின வார்த்தி
தாளைத்தழுவியே பாடின மாவலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னையாட் கொண்டதயை கொண்டேனை காத்தாட்சாமி. (5)

காக்ககடனுனக்கே தொழின் ஞானக் கணாளா! குணாளா!
காட்சி நிலைக்கக் கொடுக்குங்குரு மணவாளா
ஆக்கையாற் பாழ் படுங்காரண மென்னோ பைந்தாளா! நற்றோளா
ஆடிநடிக்கு மயிலென் முறைபினைக் கேளா
தூக்கமற்ற நின் சொருபசுபாவத்திற்காளா! நெடுநாளா
துக்கிக்கு மென்னை ரட்சிக்க வொண்ணாதோ பேராளா
சாக்கரத்திலிருக்கச் செய்புவீர் வலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னையாட் கொண்டதயை கொண்டேனை காத்தாட்சாமி. (6)

எங்கும் விளங்கி யிருந்தருட்கொட்டும் பெம்மானே! எம்மானே
என்னில்நீ! யன்வய மன்னியமோ சொல்லாய்க்கோனே
பொங்குங் கனைகடற் பூவேறு மேனின்றிட்டானே சென்றிட்டானே
பொன்னுலய காட்சி பூஜையை நோன்பாற்றினனே
தொங்காது தொங்கித் துணைகாஞ் சேர்த்தணைப்பானே இணைப்பானே
தொல்லையை வெல்லற்கு ஜோதிக்கொடி பிடித்தானே
தங்காசனத்யானஞ் செய்த மணிவலக் கள்ளன் நல்லவுள்ளன்
தன்னையாட் கொண்டதயை கொண்டேனை காத்தாட்சாமி. (7)

ஐங்குறியுற்றக் குருதியருவியை யூற்றி! குளிர்ப்பாற்றி
யாடையினூற் றுடைக்க வேண்டுமெப்பா காப்பாற்றி
சிங்காசன மணிமேடைக் குழாத்தினரோடு எனையீடு
சேர்க்கும் படிக்கிருபை செய்தாலல்லோ புகழ்நீடு
மங்காது செங்கரத் தாணிபட்ட வடுகையா மேசையா
மாமறை வாசகம் சொன்னபடி செய்வீரையா
தங்காது பொன்னடி தாவிய தூய்வலக் கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னையாட்கொண்ட தயைகொண்டெனை காத்தாட்சாமி. (8)
காமிப்பொய்யன் கொலைகோளுரை யைப்பேசும் வஞ்சன்! கன்னெ
காலச்சழக்கெழிற்கோலங் கொண்டார்க்குளே நஞ்சன் [ஞ்சன்
பூமிக்குப் பாரச்சுமையாய்ப் பிறந்தபுன் சொல்லன்! அறிவில்லன்
புண்ணிய ஞானமில்லாத மனங்கருங் கல்லன்
நேமியாமன் நிர்வயத்திற்காளான நான்கூவி! வேண்டிதாவி
நின்னை நினைந்திடாமற் கெட்டுப்போன மாப்பாவி
சாமித் திருப்புகழ் பாடிய மாவலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னையாட்கொண்ட தயைகொண்டெனை காத்தாட்சாமி. (9)
காலைத்தழுவிப் பண்பாடுந் தியானர்கள் காட்சி! பொறைதாட்சி
காட்டிநெறியளிக்குந் துரையேநீ கடாட்சி
மாலைக் கவிப்பிரமன் தோமாஸேற்றிட நீட்சி! யறமாட்சி
வைத்தால் விளக்கப் பிரகாச முண்டாகுமெய் சாட்சி
ஓலைமுடிக்குளிர்ப் பூந்திருவே ஞானத் தேர்ச்சி! யாராய்ச்சி
உண்மைசொலு மென்னிரு கண்மணி வினைபோச்சி
சாலப்பனித்தப் பேரின்பமணி வலக்கள்ளன்! நல்லவுள்ளன்
தன்னையாட்கொண்ட தயைகொண்டெனை காத்தாட்சாமி. (10)

---

## என்னிற் கனிவு.

### கீர்த்தனை.

இராகம் - கேதார கௌளம் - அடதாளம்.

பல்லவி.

என்னை மீட்க கனிந்த இரக்கம்
என்ன இரக்கமோ! அது

அநுபல்லவி.

கன்னற் பாகோ! கதலி தேனோ
கற்கண் டமிர்தமோ திருவரு—ளென்னை.

சரணங்கள்.

1. பிறவியைப் பெற்ற வெனக்காய்ப் பரிந்து
பேரின்ப நறைமறையைச் சொரிந்து
திறலுடை தீர்க்கர்ச் சொல்லுரு மலிந்து
திரித்துவத்தி ரண்டா மாளாய்பிறந்து (என்)

2. பொன்னுண் மறைந்து கிடக்கும்! பூஷணம்
போன்று! என்னுரு பொலிந்து பூமணம்
தன்னைக் காட்டாத வண்ண லக்ஷணம்
தாம நாதியுமானோய் நின்குணம்! (என்னை)

3. பாவியான் படும் வறுமைக்கிரங்கி
பாமரத்திற் குளேபடுத் தொடுங்கி
ஆவிய யிர்த்திரந்தங்தோ தியங்கி
அருளளித்த மெய்ப்பொருளே மயங்கி (என்னை)

4. பொறையருளற மற்றக் கொடியன்
பூவையரடி பாடு மிடியன்
நறை குடித்து வாதாடுங் துடியன்
நன்றிக்குக் கைமாறறியாப் படிறன் (என்னை)

5. பிரமன்! தோமாஸூரைப் பிரகாசப்
பேரறி விற்பூத் திட்டோ யுல்லாச
வரத்தை யடையு தற்காய்மா நேச
மகிமைப் பொய்யாமல் வரவேண்டு நீச! (என்னை)

இராகம் - பியாகடை அடதாளம்.

பல்லவி.

மறைத்துகொண் டுளத்துக்குள்ளிருக்கின்ற சொருபத்தை
மதிபூத்தறிவை நெஞ்சமே!

அநுபல்லவி.

கரத்தை விரித்தஞ்ஞான மில்லையென்றே காட்டினான்
கருணைப் பிழம்பைக் கொட்டியமிர்த நன்றே யூட்டினான். (மறை)

சரணங்கள்.

1. விஞ்ஞானத் தலகிரி முடிவீதி வீற்றிருப்பான்
வேதவிற்பனர்களாற் செய் வேள்வியை முடிப்பான்
அஞ்ஞானஞ் சிதறுண்டு போகவில்லா லடிப்பான்
அவனெவ னென்னிலோ! இவனாகவே தடிப்பான். (மறை)

2. கோட்டை யொன்பது வாயல் கொண்ட நகருடையான்
கொடையறம் பொறை நட்புக் கொள்ளும் படையுடையான்
காட்டைக் கலைத்து வேட்டையாடற்குப் பின்னிடையான்!
கண்ட நான் மிருகத்தைத் துண்டாடு மானுடையான். (மறை)

3. செஞ்சொற்க விசம்பிர மன் தோமாஸ் மனம்! பூத்த
தேவ தெய்வீக நல்லோர்தியா னாலயத்திற் காய்த்த
செஞ்சூரியனே சொர்க்கமத்தி பாதலம் நீத்த
ஜெய சிலுவையின் கொடிதிரன் முத்தலம் வாழ்த்த. (மறை)

## உலகரக்ஷகர் உயிர்த்தெழுந்ததின் பேரிற் கூறிய
# கீர்த்தனம்.

### விருத்தம்.

மண்டலத்திலுறு துயர்க ளனைத்துந்தீர்க்க
மலையடியில் மனுவுருவாய் வந்த நித்யன்
தொண்டர்கட்கு மெய்ம்மறையை யுபதேசித்து
சொல்லரிய வற்புத காக்ஷிகளைச்செய்து
துண்டர்களா லடிக்கமுகம் துப்பப்பட்டு
சுருதி மொழிப்படிக் குருசில் தொங்கிமாண்டு
விண்டலத்தை திறந்தளிக்க வுயிர்த் தெழுந்து
வேதமுடி தினகரனாய் விளங்கினனே.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வேத ஞானப் பர்வத முடிதினகர விகஜிதனுயிர்த் தெழுந்தான்

அநுபல்லவி

சீதவனுத்த சந்த்ர! விம்பதவள காத்ர
சிலுவை கொடி துலங்க
வலகை யுளங் கலங்க (வேத)

சரணங்கள்.

1. பாரார டரிடர் படுங்கொடுநெடிதட பவம்பெரும்
பற்றையறுக்க—திகழ்
பேரா யிரமாயிர மூமையர்க் குருடர் பேசநல்
விழிதிறக்க—முப்பானிரண்டயனத்
தீரா பெரும்பாடுறு மங்கையர்கலைத் தொடபிணியது
பறக்க—நெய் நசரை
யூரா மரித்திருக் குமாரா! ஏழைகளுபகாரா! வெனத்
தோத்தரிக்க—மாக்ஷி.
ஒல்லாரிடத்து மறை கல்லாரிடத்து முறைச்
சொல்லாரிடத்து ஞான மெல்லாரிடத் துரைத்து
ஒலியற்ற பிணத்தைக் கண்டயிற் புற்றோர்கட் குமுந்த
தலித்தா குமியென்றுரை புகட்டி எழுப்பிதந்த (வேத)

2. தண்ணார் மலர்ப்பூத் தளியுமிழ்க் கார்தவழ் தருகாவன
நாடி—இந்த
மண்ணார் கரையறச் செம்பால் வடியவல்ல வாண்டகையை
மன்றாடி—ஜெபம்
பண்ணா ராயிரத் தொருநூற் றிருபதினைவரு முந்தனை
தேடி—சற்றும்

எண்ணு திருகரம் வீக்கிச் சிகையைப் பிடித்திழுத்து
வளைத்துபிடி—முக

திடித்து பல்லை நெறித்து
கடித்து கழுத்தை நெட்டி
பிடித்து குப்புறத் தள்ளி
யொடித்து துடித்து விழக்

காலாலுதைக்கவே சிலர் கரத்தின் கழை
கோலாலடிக்கவே பலர் தரு கனவார்த்
தோலாலடிக்கவே சிலர் சாட்டை கயிறு
நூலா லடிக்கவே பலர் சிற்றுற்றினிற்
கந்து களெழ சிந்து சிந்தென

நைந்து தசைகளால் பஞ்செனப்பட
கட்டிகைப் பாசன்மனைக்கு முட்டிமுட்டிக்குத் தட்டி
கொண்டேக—யூதர்களதனை
குட்டிக்கிட்டி இட்டுமொழிக்கூறிப் பல்லைத்தட்டுவோ
மண்ணுக—வெனவே தொடைத்
தட்டிமீசையை முறுக்கிக் கைப்பாசன் கன்னத் தடித்து
யேக—பிலாத்துமனை
நெட்டிநெட்டி தள்ளியே மூட்டுநெகிழவே கடூரமாக
கற்றூணிற் சேர்த்து

இறுக்கி யென்பினை
நொறுக்கி சார்பட
நறுக்கி துகளெழ
அறைக்கி விடயூதர்

வீறிடவே வடிவ மாறிடவே குறுதி
சேறிடவே யருவி யாறிடவே மள்ளர்கள்
கூறியமுண்முடி யானதை சிரஞ்சூடி
கோடரத்தை புயத்திற் சுமத்திடவே தள்ளாடி
பாரியஜெருசலை மணன்மேட்டி லூசலாடி
பரதவிக்க பறபற வென்விழுத்துச் சாடி

பார்த்து மடைந்தைகண்
பூர்த்து ப்ரன்முகம்
வேர்த்ததையே துண்டஞ்
சேர்த்து துடைத்திட

பருத்த மரத்திரு காத்தை விரித்துமே
வருத்த முற்றிட இருப்பு ஆணியை.

மாட்டியே மடக்கி யடித்தார்—மலைமுகட்டில்
கூட்டிக்கொண் டுயர்த்தி யிடித்தார்—இருகள்ளரை
காட்டியே கைகொட்டி களித்தார்—கொலைஞன்பெரும்
ஈட்டியினுற் குத்த துடித்தார்—யோசேப்பும்.

காணு வூராளும் பரி கன்னிமரி யன்னையரும்
கலங்கிக் கண்ணீரருவி பாயச லோமியரும்
வாளுடர சென்றுள நெகிழத் திருவமிர்த
வாக்கு ஏலி! ஏலி!! லாமா அசப்தானி என்றவரும்

வாய்விட்டலரி மரித்தார்—எலியா வென்று
தாய் கூப்பிட்டா ளென்று சிறித்தார்—தீவரித்தார்.

ஆலயத்தி லுள்ளதிரை மேலுமட்டாகக் கிழிந்து
வேலைசூழ் புவியதிர்ந்து மாமலையெல்லாம் பிளந்து

அங்கு நின்றவர்க ளழுதார்—அதிற் சிலர்வ
ணங்கி பரனையே தொழுதார்—சிலுவையுள்ள
சங்கிலி பந்தத்தை யவிழ்த்தார்—சவத்தை திரு
மங்கை மரிகை யொப்புவித்தார்—ஆணிகழற்றி.

ஆருத் துயரால் தேம்பி! அழுங்கண்ணீர் செம்பாற் போக்கி
யனைத்தும் படைத்தபரச்! சுதனென் றிருகை தூக்கி
சீராயுரு வர்ணபரி வட்டத்தை மெய்மீது வீக்கி
திருக்கல்லறை சேமித்து பெருங்கல் புறட்டி சாத்தி

சென்றிட வன்றிரவில் சேவகர் கூடிய காவலை செய்ய
நன்றுதீ தென்றுரை சேசு நாதனே பாரினிற் கருணைபெய்ய (வே)

3. ஆதித்தன் வாரத்திற் சோதிப்ரகாச மதாக பரத்தை
விடுத்து—யூதர்
பேதித்திட கல்லினையே! தேவதூதன் புரட்டி யப்புர
மெடுத்து—எறிந்துசில
மாதர்களுக் குகந்த சேதியுங் குருபரன்! வருகையனைத்
துங்குறித்து—சீடர்க்
கோதுங்களென வுரைப் பகர்ந்திட வெங்கணும் கொண்டாடி
முரசடித்து—உரைத்தபடி

கொற்றவ னுயிர்த் தெழுந்து வருவார்—நமக்
குற்ற வரமான தெல்லாந் தருவார்—இதுவுமன்றி
பற்பல நவஞ்செய் யாசீர் புரிவார்—மா
சற்ற மோக்ஷ வாழ்வை கொடுத்திடுவார்—எனப்

பாடி சீடரை தேடி மலையினை
நாடி புகழ்ந்துற வாடி சொல்லபரன்

பத்து கோடி கதிரவன் சுடர் துன்ன
முத்த மொத்த நகை முகமது மின்ன
சத்ய மறை வசன முறையிட்டு சொன்ன
அத்தனை குறியடை யாளங்கள் மன்ன

ஐயன் கருணை நிறை
துய்யன் உன்னத பர
மெய்யன் பரிந்த ணைக்கும்
கைய னெனக் கொண்டாடி

அருந்தமிழ் கவி தோமாஸ் முகிற் பொழியப் பாரோங்க
பெருங் கருணை யைப்புரிந் தருளுவீ ரிடர் நீங்க. (வே)

---

## திருச்! சிலுவை த்யான சித்தாந்த ஞானக் கண்ணி

# தற்சிறப்பு பாயிரம்.

### காப்பு.

உருவிலாது உருபொலிந்து உருகுளிர்ந் தருண் மரிக்
கருவலர்ந் தொளிர்ந்த ஞானக் கர்த்தனற்றாட் காப்பதே.

### நூல்.

1. அஞ்சிறை யன்னமொன் றுறழுகைக் கொண்டு
ஆடிநடிக்குதடி மயிலே—அதைப்
பஞ்சரத்தில் வைத்து, ஏற்றிப் பணிந்திடி
ஐந்தும் வசப்படுங்காண் மயிலே

2. விஞ்சும் பரிமளக் கோற்பூத் தொளிர்ந்த வெண்
மென்மடல் வீற்றதடி மயிலே—அதைத்
தஞ்சமன்றுடி யநுட்டிக்கின் விஞ்ஞானத்
தத்துவம்! வாய்க்குமடி மயிலே

3. மூன்றை மடுத்தெழின் மூன்றை விடுத்தொரு
மூன்றுக் குடைத்தவண்டி மயிலே—முது
ஆன்றோர்த் தெளித்தரு ளூற்கொண்டினிதுள
மாய்ந்தே தெளிவாயடி மயிலே

4. காலுமடக்கி நடுவி னிறுத்தி
நயஞ்செய வாய்ப்பவண் டிமயிலே—அவன்
தோலுடற் கேவலா வஸ்தைக்கு ளொன்றியே
தோற்று திருக்கின்றுண்டி மயிலே

5. காட்டினுட் கொள்ளைக்கொள்ளு மைந்து கள்ளரைக்
கண்டு வசப்படுத்தி மயிலே—மண்
வீட்டினுட்டீப மெரிய விஞ்ஞான மாண்
விஞ்சைத் தெளிவாயடி மயிலே

6. ஆசைநிதி மடவார் புடவிப் புக
ழுந்தகன் தோற்றமடி மயிலே—இவற்றின்
மோசம் போகாதுப் பேரின்ப மெனுஞான
முத்தியடை வாயடி மயிலே

7. கோட்டையுறு மடவாயற் ருளிட்டுங்
குஞ்சரத்தை யடக்கி மயிலே—நீ
கேட்டிடிற் கேட்கு முன்ன மருண்ஞானக்
கேண்மைக் கிடைக்குமடி மயிலே

8. ஓங்குமுலகு உரைப் பொருளா மனு
ஊதப் பெற்றப் பொருளா? மயிலே—அது
நீங்கா திருக்கு முன்ன மெழின் ஞான
நிலையறிந் துய்வாயடி மயிலே

9. வாளுட் கழிப்பதினிற் சுக மொன்றிலே
வாய்மைத் தெளிவாயடி! மயிலே—நன்று
வீணுளிமைப் பொழுதோ? வின்றோ? நாளையோ?
மெய்ம்மையைக் காண்பாயடி! மயிலே

10. காற்றிற் படுமிலவம் பஞ்சைப் போலக்
கடும்வழி யோடியடி மயிலே—ஆங்கு
ஏற்றிப் பணிந்திடி லென்னுண்டாங்கில்லை யென்
றெண்ணித் தெளிவாயடி மயிலே

11. கன்மமெனும் வஞ்சப் பாவவிருண் மொய்த்துக்
காத்த வனத்தினிலே மயிலே—துரை
தன்மனமூங்கி வியர்த்துத் தவங்கொடு
தத்தளிக் கின்றானடி! மயிலே

12. கண்ணிற் கலந்து ஞருப் பொலிவான் வெளிக்
காட்டி நடைக் கொடாண்டி மயிலே—தயைப்
புண்ணிய னெண் குணன் பாலிற் கலந்த நெய்
போலிருப்பான் காணடி மயிலே

13. உன்மத்தன் காமக்குரோதன் வஞ்சன் மோகன்
லோபக் குணத்தனடி மயிலே—கொடும்
வன் மத்தர் சூழ்ந்து! மேன்வீழ்ந்து! பிடிக்க
மயங்கிக் கைப்பட்டானடி மயிலே

14. பேராசைக் கொண்டபிண மோ? டணமெனும்
பித்துக் கொண்டாடுதடி! மயிலே—தெரு
ளாராசையற்றுக் கதியற்று நாளை
யழன் மண்டி வேகுமடி மயிலே

15. பொய்க் கோளனென்னு மானுசன்! கைப்பாதகன்
பொறாமைத்தனங் கொண்டடி மயிலே—திகழ்த்
தெய்வப்படிவ மென்றெண்ணிப்பாராமல் வீண்
டேமை விளைத்தானடி மயிலே

16. தானென்னு மாணவக் காமியராம் பூதச்
சார்பினரை விளித்து! மயிலே—எம்
மானென்று பாரா மலே யிருமாப்புற்று
வஞ்சகர்த் தம்மிடமே மயிலே.

17. வெங்கண் சினங்கொடுப் பங்கத்தடியினல்
வீக்கி யடிக்கச்சொலி மயிலே—செயப்பரன்
அங்கம் பழுதுறுமோ வாய்மைத்தங்கமென்
றுய்ந்தே தெளிவாயடி! மயிலே

18. தானெனு மாணவ சாட்டைக் கொடுதுள்ளி
சாடியடித்தாரடி மயிலே—கன
வினமுடைய பேமானியரென்றுநீ
யெண்ணித் தெளிவாயடி மயிலே.

19. ஞானசன் மானன் பிலாத்து வெனுந்துரை
நற்ச முகத்தினிலே மயிலே—யூதக்
கோனை நிறுத்திக் குற்றஞ் சுமத்தி யங்கோ
கொல்லவு சாவியடி மயிலே.

20. இத்தகைக்கூறு மொழிக் கொன்றுங்கூறு
திருக்கும் பரமனையே மயிலே—கண்டு
வித்தகர் மீதொரு குற்றங் காணே னென்று
விஞ்சை தெளித்தினிதுமயிலே.

21. தீட்டிய சொல்லினைத் தீயர்கண் மாந்தியே
தீமை யுரைப்புகட்டி மயிலே—கொடும்
போட்டியாய்க் கொல்ல விடைதாரு மென்றுமே
பொய்யை நிலை நிறுத்தி மயிலே.

22. இவ்வாலயத்தை நான் மூன்றி லிடித்து
யெழுப்புவே னென்றனனே மயிலே—மெய்மைக்
கொவ்வா தெனக்கைக் கழுவியே யொப்புக்
கொடுக்கப் பிலாத்தகத்தின் மயிலே.

23. வெட்ட வெளிநெடும் வீதியிற் கட்டுண்டோர்
மேட மிருக்குதடி மயிலே—அதைக்
கட்டாயங் கண்டு பூசித்திடின் மட்டற்றக்
காட்சிக் கிடைக்குமடி மயிலே.

24. அவ்வுரு விவ்வுரு வாகியே யொன்றி
யருவுரு வானதடி மயிலே—அதன்
செவ்விய சீர்த்தியை வாழ்த்தி நோன்பாற்றில்
தெரிசனம் வாய்க்குமடி மயிலே.

25. காதற் பெருக் கடைவான்! செயலூமையன்
கண்ட கனவாமடி! மயிலே—அப்
போதத்துடைத்துப் பாழ்த்தீதுற்றுச் சாம்பர்
புகையமண்ணுவானடி மயிலே.

26. துய்ய செருசலேயா மணநாட்டி லார்
சோதிக் குருமணியம்! மயிலே—அடும்
மையார் சிலுவையினைப் புயந் தாங்கி
வழிநடந் திட்டதடி மயிலே,

27. அவ்வழி யிவ்வூர் வழியென் றறிந்தோரஞ்
ஞானிகளென் றெண்ணடி மயிலே—மோனச்
செவ்வழி யோங்குங் கபால வரைமுடிச்
செல்லுங் கண்டுகொள்ளடி மயிலே,

28. அந்தோபடிறர் அஞ்ஞானக்கயிற தால்
அத்தனைக்கட்டியடி மயிலே—தினம்
நைந்தார்! சிதைந்தார் மருண்டார்! வெருண்டார்சீர்
நன்மை யடையாமலே! மயிலே.

29. இல்லா விடமில்லா தெல்லாந் தானாகிநற்
சொல்லா யொலிப்பானடி மயிலே—மறைக்
கல்லாதவரிற் பொலிந்துருக் காட்சிக்
கருதவிளைப்பானடி மயிலே,

30. வண்மைத் தருக் கொடையாளன் கபால
வரைமுடி மாடத்திலே மயிலே—அவன்
வெண்மைச் சுடர்கொடிரு வினைமத்தியில்
வீற்றிருக் கின்றானடி மயிலே,

31. ஞாலத்தடக் கடன் மோதுறும் பாழ் பவத்
தூலமரக் கலத்தில் மயிலே—அவன்
ஆலத்தை மாந்தியே மூலத்தைக் கண்ணுற்
றழுங்கிப் போய் விட்டானடி மயிலே.

32. ஓங்குஞ் சிலுவையுடன் மரமாசை மூன்
றாணி துளைப் பட்டடி மயிலே—உயிர்
நீங்கினா னென்றே நிமலனை வாழ்த்தி
நிதமுந் துதிசெய்யடி மயிலே.

33. வேற் காட்டித்தீட்டிவான் கோலீட்டியாலே
விலாவிற் குத்துப் பட்டடிமயிலே—அருட்
காற்காட்டி னான்மறை நூற்காட்டி னானென்றே
கண்ணை விழிப்பாயடி மயிலே.

34. கூன்மதியும் ரவியுந் திரை சீலையுங்
கொண்டற் புவியதிர்ந்து மயிலே—இரு
ளானதைக் கண்டு நடுங்கிக் கழன்முத்த
மன்பாய்க் கொடுப்பாயடி மயிலே.

35. கற்றவர் சொற்கு வார்த்தீக னல்லால் மூன்று
காலப் பருவனடி மயிலே—தீ
தற்றார் தமக்குக் கனிந்து சொருபநற்
சேவைக் கொடுப்பானடி மயிலே.

36. உந்தி தடத்துட் கருமலிந்தே புகழ்ந்
தோதக் கனிந்த வண்டி மயிலே—சொல்லா
மந்திரத்தா லுருப் போட்டால் நமக்கு முன்
வாரா திருப்பானடி மயிலே.

37. ஆரியன் முன்னொரு! வாரியன் தோற்றிட
வந்த மொன்றுகுமடி மயிலே—ஞானச்
சூரிய னென்னத் துளும்பா? துளும்பியே
ஜோதியைக் காண்பாயடி! மயிலே.

38. கண்டானந்தித்து மகிழ்ந்தவர் காட்சி
கருத்தையென் சொல்வேனடி மயிலே—உட்
கொண்டால் முதிர்ந்த பேரின்பமெனு ஞானக்
கோலங் கிடைக்குமடி மயிலே

39. வாசத்தயில மெய்யூற்றி நிறை யுரு
வர்ணபரி வட்டமிட்டு மயிலே—மனம்
பூசித்துக் கல்லறைச் சேமித்துக் காவலைப்
பொய்யர்கட் கொண்டாரடி மயிலே.

40. கொண்டற் பனித்த திவாகர னற்புத
கோடி மலித்ததைப் போன் மயிலே—சுடர்
அண்டர் வியக்கச் சிலுவைக் கொடியுட
னுதித்தன் வாரத்திலே மயிலே.

41. மெய்யைந்து காயம்விளங்கப் பரமன்
வியப்புற்றுரிமைக் கொடு மயிலே—இரு
கையைக் குவித்துக் கவிதோமா சேத்தநற்
காட்சிக் கொடுத்தானடி மயிலே.

---

# திரு உத்தானப்பா மஞ்சரி.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மண்டலமே கொண்டொளி ரஞ்ஞான நீற
மரிக்கருபூத் துதித்ததயா மந்த்ர வாக்யன்
கொண்டல் பனித்தே குளிர்ந்து தொண்டர்கட் சீர்க்
கொள்ளபல வற்புதத்தைச் செய்திப் பாரில்
துண்டர்வெகுண் டடித்துதைக்கத் துப்பப்பட்டுச்
சுருதியுரைப் படிச்சிலுவைத் தொங்கிமாண்டு
விண்டலத்தைத் திறந்தளிக்க உயிர்த்தெழுந்த
விமலபுவ னேஸ்வரனே வேண்டு வாமே.

---

## கீர்த்தனை.

இராகம் - சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

புவனேஸ்வர பர மண்டலோதய ஞானப்
புரவலனுயிர்த் தெழுந்தான்.

அநுபல்லவி.

பவனஸ்தம்பன்ன ப்ரபன்ன ஓசன்ன
பதிதிவாகர ஜன
நிதிமனோகர தன புவனேஸ்.

ஆதியநாதிமுக்தா தீனேவியமா மயவற் புதாதிக்க
முத்தங்—குளிர்
பாதிபிறைக் கமழ்ப்பூங் காவிமகிழ்மரி நற்பாலனுய்
வந்தவத்தம்—எழிற்
சோதியுடை கொடுவைக் கோவிலெரியெழா மற்றுஞ்சிய
விளநத்தம்—மறை
வேதிய ரோதியநீதிமுறை மெய்ம்மையை விளக்கிடத்
திடசித்தம்—அருட்

காதலுடைத்து ஆதன் குலத்தினைத் தாங்க
கடியினம் பயந்தழல் நரகிடை யேங்க
சீதமுகிற் பெய்துயிர்ப் பயிர்வள மோங்க
திகழ் ஜெருசலே யுளர் களின்வினை நீங்க

தேர்ந்து! செவிடர்க ளூமைக
ளார்ந்து! முடவர்கள் ரோகிகள்
தீர்ந்து! குருடர்கள் சுரமுளர்ச்
சார்ந்து! பரவசங் கொண்டுயர்

சேதன ஞான விலாசனைப் பாடி
ஆதனஞ் சீரடை வீரெனச் சூடி
நாதனே மேசையா வென்று கொண்டாடி
யூதகுலத் தினர்கள் முன்ன மோடி

உற்றதெல்லாம் உரைத்தார் நயந்துவிதி
சொற்றவராம விசைத்தார் அருண்மறைச் சீர்
கற்றவர்கள் சம்மதித்தார் இதனைக் கேட்ட
மற்றவர்களும்பிரம் மித்தார் வினைதுமித்தார்

மந்திரவாக்கிய மோனப் பிரகாசன்
இந்தரை யோரை கதி சேர்க்க சர்வேசன்
தந்த பத்துரைப்படி செய நசரேசன்
வந்தன ரெனப்பலர்ச் சொலதுரை ராசன்

வாரி திரைமேல் நடந்தார்—பன்னிருவர்கள்
தேரிசிந்தையே குளிர்ந்தார்—கப்பர்நாகென்னு
மூரில் மகிமைப் பொலிந்தார்—அநந்தபுகழ்ச்
சீரிய ரேத்த மலிந்தார்—வான் முரசங்கள்

செய்யவே தையலா ரையனும்பரந் தீண்டி
பையவினை யனந்தனைய பொற்கழல் வேண்டி
உய்ய நெறிவிஸ்வாச ஊக்கமனத்துள் தூண்டி
தெய்வமே என்பிழைப் பொறுத்தா ளெனக்கொண்டாடி

சேசுவெனுநன் ஞமன்—உயர்விஞ்ஞானத்
தேசழகுறுஞ் சோமன்—அரூபாமய
வாசொபன்யாஸத் தாமன்—ஐயாயிரவர்
நேசவிஸ்தார காமன்—நெறிபிறழா

மந்திர நல்கிய சுந்தர சீரன்
ஐந்தடை மீனிரண்டாலுப காரன்
விந்தையே தந்துப சரித்துக் காம்பீரன்
சிந்தை குளிர்ந்தனர் காண்ஜெய தீரன்

சேவடியினை நாடி—அகங்குழைந்து
பூவையவள்மன்றாடி—ஐயேயெனதுமகட்
சாவடைந்தாள் கண்மூடி—கருணையாசீர்
தேவேசெய்வீர் பண்பாடி—யெனத்தாட்பாடி

செப்பிய சொற்படி சுப்பிர தீபன்
முப்புவனம் புகழற்புத ரூபன்
அப்போதெழுப்பி யளித்துப்ர தாபன்
இப்பிரபஞ்சமே யேத்தசல் லாபன்

எழிலிருகன்மறை வரிக்குரைச் சாற்றி
ஏகபிதாவை மனத்திடைவிடா தேற்றி
வழிபடுவீரென வையமே தூற்றி
வந்த சவுந்தரன் பாதத்தைப் போற்றி

வாய்மையே கண்டடை வீர்கள் சிலாக்கியம்
தூய்மைப் பேரின்பதன மாமோக்ஷ பாக்கியம்—புவனேஸ்.

மையார் முகிற் றவழ்ந்திடும் பொழினிறை தருவளர்
மலர்கான்மடுத்து—வினைக்
கொய்யாரிடர்கெட வுடற்செங் குருதியெழக் குருபரன்
கழலடுத்து—தவஞ்
செய்தார் சகஸ்ற நூற்றிருபதி னைவர்களார் தேடியே
கடுகடுத்து—இரக்கமனம்
வையா திணைகரம் வீக்கிச்சிகைப் பிடித்து வளைத்
துழுவைப்போல் துடித்து—கொடும்

வஞ்சக நெஞ்சினர் வெஞ்சின மிஞ்சியே
அஞ்சிடாக் குஞ்சரர் மஞ்சரி யம்முக

மலருடைபட விடித்தார் நெறித்துமேப்பல்
லவர்த் தெறித்திட கடித்தார் கழுத்தையூதக்
குலர் கொக்கரித்துப் பிடித்தார் என்புகளினை
சலஞ் சாதித்தந்தோ வொடித்தார் இதுவுமன்றி

தத்தியே குதித்துக் கையால்
குத்தியே சரித்துக் காலால்
எத்தியே யுதைத்து வாரால்
நெத்தியே கிழித்துப் பாரால்

நீதியில்லா பாதகர்க
ளாதியென் றெண்ணுமலந்தோ
மோதிமெய்மேல் வீழ்ந்துபரந்
ஜோதியை யாகடியங்கொண்

டங்க தங்கமங்க வதைத்தார் அருவிநிறைச்
செங்குருதிச் சிந்தச் சிதைத்தார் இல்லாதக்கொடும்
பங்கப்படுத்தியே சதைத்தார் அடசிருப்புச்
சங்கிலிக்கட்டிட்டே பஃதத்தார் வெகுண்டுமிழ்ந்து

சல்லடைக் கண்ணென்ன செய்து
செல்லரிக்குமாறு கொய்து
சொல்விருப்பா ரம்பை யெய்து
நல்லிரக்க மின்றி வைது

நட நட நட நட நட வெனத் திட்டி
மட மட மட மட மட வெனக் கொட்டி
பட பட பட பட பட வெனத் தட்டி
கட கட கட கட கட வென நெட்டி

கைப்பாசன் வாழுமரண்மனைக்கு சுப்ரதீபனைக் கொண்டேகி
ஆண்டகைதிகழ்
மெய்ப் பாசத்தவிழ்த்திடாமற்நிற்கக்கண்டனன் பொல்லாத்துரோகி
அஞ்ஞானகுண
பொய்ப்பா சனன்னுசனடா தப்புரைப் பகர்ந்தவி விவேகி
பிலாத்துமனை
மைப்படியவே கன்னத்தறைந்து கொடுபோய்விட நல்யூகி
அற்புதன்முக

வாட்ட மெழிற்றகை
நாட்ட மொழியினை
கேட்டினிதே மாசி
ரேட்ட மெனதுரை

எழுதாக் கிளவியன் சொல்லைத்தினைத் தள்ளேன்
பழுதிலான் திவ்யரத்தப் பழியினைக் கொள்ளேன்
முழுதுமுங்கள் வார்த்தைமெய் யென்பதாய் தெள்ளேன்
கழுவியொப்புக் கொடுத்த கருத்தென்னே! விள்ளேன்

காலச்செயலான நிதியோ அரியமறை
மூலச் சொற்பணித்த விதியோ அஞ்ஞானமுற்ற
ஞாலச் செயலான மதியோ துடியர்க்கொல்லக்
கோலச்செயலான சதியோ கற்றூணிற்சேர்த்துக்

குறுக்கியே துமித்து
நறுக்கியே குதித்து
நொறுக்கியே மிதித்து
அறக்கியே பதைத்து

கொண்டெழுபான் ரெண்டு முட்களாலே சிரமீதின்முடிசூடி-கொடுந்
துண்டரீகர் கோடரத்தையே புயஞ்சுமத்தியே தள்ளாடி-புகழ்
விண்டொளிர் ஜெருசலையம் வீதியிழுத்தேகியே சென்டாடி-மதி
கண்டொருப்பெண் வேர்த்தமுகந் துண்டமொத்தி பார்த்துளமே.
[வாடி! வருங்

காக்ஷியை வெகு
தாக்ஷியாக வே
மாக்ஷிமைக் கொடு
சாக்ஷியஞ்சொலப் பொன்

தலைவரைமீதிற் கூட்டிக்கொண்டு கவிழ்த்து
மலர்திருக்கரமதை மரத்தில் விரித்து
அலரெழிற்கழலிலு மாணி யடித்து

நிலையிருகள்ளர் நடுநிறுத்தி நடித்து
ஈட்டியெரியீட்டி யெடுத்தார் தாகமெனக்கோல்
பூட்டிவிஷக்காடி கொடுத்தார் அருந்திடவாய்
யூட்டசுவைத்தந்தோ உமிழ்த்தார் குருடன்விலா
ஈட்டியினுற்குத்தத் துடித்தார் விழிதிறந்து

ஆறழகா நின்கருணைப்
பேரழகு மெய்ப்புநிய
சீரழகைப் பார்த்தகண்கள்
மாறிப்போ மெனத்துயரால்

மங்கியே கண்ணீரைப் பொழிந்தான்! அந்தந்தோமனந்
தங்கிடா வண்ணமே குழைந்தான்—பலயூதர்முன்
சங்கிடாமற் பொற்றுள்விழுந்தான்—பரமென்றேத்திப்
பொங்கிப் புகழுற்றே யெழுந்தான்—யோசேப்பும்

புண்யமரியன்னையரும் பூவைசாலோமியரும்
புலம்பிக்கண்ணீரருவிப் பொழிய மகுதேலாளும்
வண்ணம்பரமெனவாய்க் குழையவருளமிர்த
வாக்கு ஏலி! ஏலி! லாமா அசப்தானி யென்றவரு

மானே கனிந்து மரித்தார்! ஒளிகிளருஞ்
சேனே களிக்க வுத்தரித்தார்—சுத்திகரித்தார்

ஆலயஞ்சீர்பூத்த திரைச்
சீலையேரெண்டாய்க் கிழிந்து
வேலைசூழ்ஞால மதிர்ந்தக்
காலையேகிரிப் பிளந்து

அங்கநடுக்குற்றே யழுதார்! பரன்பனித்தாட்
பங்கயத்தைப்பற்றி தொழுதார் நெடுமிருப்புச்
சங்கிலியின் கட்டை யவிழ்த்தார் சவத்தைத்திருத்
தங்கமரிக்கையி லொப்பித்தார் ஆணிக்கழற்றி

அடையாதுயரடைந்து அழுங்கண்ணீர் வெள்ளந்தேக்கி
அம்பரமண்டலமாட் சேயென்றிருகைத் தூக்கி
உடையுருவர்ன பரிவட்டத்தை மெய்மீது வீக்கி
ஒளிர்கல்லறைச்சேமித்துக் கருங்கல்லதன்மேற்றூக்கி

யுறுதியன்றிரவு வாளோங்கியே வீரர்கள் காவலைச்செய்ய [னே
இறுதிகனிந்துமோக்ஷ வின்பமடைந்திடும்படி வினைக்கொய்ய-புவ

பொங்குஞாயிறு வாரந் திங்களெனச்சுரர்கள் பொலிந்து வம்பரம்
விடுத்து—யூதர்மனங்க
லங்கபெருங் கல்லினைச்சிங்க மெனவாய்ப் பாய்ந்து வப்புரத்தினி
லெடுத்து—எரிந்தொளிர் தூய்
மங்கையர்கட்குகந்த வார்த்தையு முயிர்த்தன்பாய் வருவதை நனி
படித்து—புநித சீடர்த்
தங்களுக் கோதுங்களென வுலகெங்கணுஞ் சதிரொடு முரசடித்து
மகிமைக்கொடு

தற்பரனுயிர்த் தெழுந்து வருவார்-உய
ரற்புதவரங்க ளெல்லாந் தருவார்-தேவ
நற்கருணை யாசீர்பல புரிவார்-தீ
தற்றமோக்ஷ வின்பங் கொடுத்திடுவா-ரென்று

தேர்ந்து கிரியினை
நேர்ந்து சீடரை
யோர்ந்து புகழன்பு
கூர்ந்து சொற்றபரன்

விந்தையாக மொழிமந்திரஞ் சொன்ன
சந்த்ரனெட்டு கோடியாய்ச் சுடர்த்துன்ன
கொந்தளிப்பைப் புவி யெங்கணும் பன்ன
ஐந்துகாய மெழிலங்கமே மன்ன

ஆரன் கருணைத்தரு
சீரன் வானுளுமதி
காரன் மங்காதனக்கு
பேர னெனமன்முடி

அணிசெஞ்சொற் கவிசம்பிரமன் தோமாஸ் துதிசொல்ல
பணியெனக் கொண்டர வணைத்தாட் கொள்வீரே வல்ல—புவனே.

---

# திருச்சிலுவை த்யான வலங்காரப்பா

# பூஷணம்.

தற்சிறப்புப் பாயிரம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

பூவுலகங் கொண்டசுக போகமதை நம்பிகெட்ட!
பாவிகளை மீட்கவுற்ற பைம்பரனை—மாவிரதங்
கொண்டுபுகழ் பாடுதற்குக் கூடிக் கலந்துரிமை
கண்டுமலர்த் தாளடைவைக் காப்பு.

## நூல்.

திருநாமாவளி - பண்கொல்லி - அடதாளம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்மனமே? ஓர்மொழிகேட் டின்புறவா யென்றே
எண்ணுகிறேன்! தூய்மைரக சியமுரைத்தற் குண்மை
சொன்மனமே? ஊனுடைத்த நாண்முதலாய்க் கன்மச்
சூழவிடி யாற்றுவண்டு வாடுவதென் பற்று
நன்மனத்தர் பாடுந்திரு நாயகனை வேண்டி
நல்லறம்வ ழாதுதவ ஞானமாணென் பாற்றி
பொன்மனத்தர் கட்சமுகம் பூத்துறவுற் றிருக்க
புலன்குளிர்ந்து திருச்சிலுவை யருட்பெறுவோம் வாராய். (1)

அருட்பரம ஜோதிபுக ழாறழக னன
வன்னையன்றி தெய்வமுள தோவறியேன் த்யானப்
பொருட்சொருப கண்யப்பிரா வண்ணியசுந் தரனைப்
பொலிவுடைத்து நிலவுமெழிற் போதவி நியானே
மருட்சொருப வினைதுகள்பட் டிரியகழன் வருடி
மனங்குளிர்ந்து! உரிமைகொடு வாழ்த்திநமஸ் கரித்துத்
தெருட்சொருப முற்றதிருச் சிலுவையடைக் கலத்தைச்
சேவைகொளப் பாழ்மனமே சேர்ந்தென்னுடன் வாராய். 2

என்னிற்பொலிந் தான்குளிர்ந்தா னெங்குமேயொ ளிர்ந்தா
னென்றுமறை பன்னியச்சொல் லிச்சையுளம் பூத்து
அன்வயனை யன்னியஞ்செய் யாதுமதி காத்து
அகத்திருத்திச் சுகத்தையநு பவிப்பதற்கு வாய்மை
என்னுளது பொன்மனமே? ஐம்புலனை டுக்கி
யிச்சையற வுச்சரியார் நிச்சயந்தேர்ந் தன்பாய்
மன்னுவையேல் முன்வருவான் தொன்வினைய நீற
வாய்மைகண்டாய் தூய்மனமே மாணுடைத்து வாராய். 3

மாணுடைத்தென் மும்மலம யக்குடைத்தஞ் ஞான
வழிபடைத்து இழுக்குறும்பொய் வஞ்சனுக்கு விஞ்சை
பாணுடைத்துக் காட்டுமோ? சொல் போதவிர தத்தின்
பற்றடையா னுக்குபுகழ் வித்தகமென் சொல்லாய்!
நாணுடைத்து நல்லவரை நாடிதொண்டு கொண்டு
ஞானமுறை கேட்கில்வினை நாசமுறுங் காட்சி
சேணுடைத்துப் பேரின்பப்பண் பாடதிருச் சிலுவை
த்யானநடை கோலுதற்குச் சேர்ந்தென்னுடன் வாராய். 4

உடன்கலந்த சம்மந்தமென்! உண்மைநிலை யென்காண்
உருவிலிநல் லுருபொலிந்த உயிர்நகையம் வேதக்
கடன்மலிந்த முடியழகன் கருணையரு ளாளன்
கதிநிலவா நிலவியுயர் கதியளிக்குங் கையன்
சடமுடைத்த சழக்கையவிழ்த் துதறிவெளி யாக்கித்
தயைகிரண ஸ்தூபியினுட் சாருதற்குண் டான
திடங்கொடுப்ப னுயிர்கொடுப்பன் சேதனப்பற் றுற்றுச்
சிலுவைத்தியா னத்தைச்செயச் சேர்ந்தென்னுடன் வாராய்.

சிலுவையென்ப தென்னை பவந் திரண்டிருண்ட சுமையஞ்
சீழொழுகி நாறுமல மூறுமுடற் பாண்டம்
நிலைநிலையா? சேட்டைகொடுங் காட்டகத்துட் புக்கி
நீத்துதுகட் சாம்பரெனப் போகுமுன ஞானக்
கலைதெளிந்து நிட்டையநுட் டானமுறை கூறுங்
காட்சியநு பவக்கருணைக் கரும்பமிர்த மாந்தி

கொலைகளவு வாதிடர்பொய் கோளுரைகொள் ளாது
கொண்டாடி குருபரனைக் கும்பிடுவோம் வாராய். 6

குருபரம த்யானமென்னே கொள்கைநல மென்னே?
குருதிவடிந் தருவியெழக் கொடுமைசகித் துரிமைத்
திருவுளமிரங்கிகொடுஞ் சேதனர்க்காட் பட்டு
ஜெபவிஜய சுபநலமே சேண்தரற்கு வேண்டி
அருட்கனிந்து பவச்சிலுவைப் புயஞ்சுமந்த கோர
வாக்கினைக ளைப்பொறுமை தாட்சிகொடு ஏர்த்து
பெருக்கமுற வித்தகைக்கொள் வார்களென்னிற் கலந்து
பெட்படைவா ரென்றவனைப் பேசுதற்கு வாராய். 7

பேசுதற்குச் சொந்தநிந்தை பேசினவர் யாரோ?
பிரிதுடைத்துக் கூறுமெனப் பேரருளை வேண்ட
ஏசினனான் கட்டிகன்னத் திழுத்துபிடித் தடித்து
எட்டியுதைத் திட்டவனா னித்தனைக்கு மேலாய்
வீசினனான் முண்முடியைச் சூடினனான்! ஆணி
மூன்றைகொண்ட டித்தவனான் விஞ்சை மதி யாது
காசியென வெண்ணிவிலாக் குத்தினவன் ஜென்மக்
கன்மமற வேண்டுதற்குக் கருணைகொண்டு வாராய். 8

கருணையருட் காட்சியென்னே குருதிவிழி வீழ்ந்து
கண்ணடைந்தா னண்ணலருட் காட்சியினைத் தேர்ந்து
சரண்பணிந்தான் முதியமறை சத்தியத்தை யோர்ந்தான்
சாமியென வேதெளிந்து தன்னையொப்புக் கொடுத்தான்
வரமடைந்தான் மற்றவர்க்கும் வாக்கெடுத்துப் புகன்றான்
வாக்குஏலி லாமாவெனா மந்திரங்கேட் டுவந்தான்
திருச்சிலுவைத் தியானமதை செய்துகளிக் கூர்ந்தான்
சேணடைந்தான் தூய்கழலைச் சேருதற்கு வாராய். 9

வந்தசுடர்க் கண்ணழுங்கி மங்கிவா னிருண்டு
வரைபிளந்து திரைகிழிந்து மகம்பல வுதிர்ந்து
அந்தகாரங் கொண்டிறந் தோர்கல் லறைகட் பிளந்து
அருகிருந் தோர்மருண்டு குருசுறைந் தவனையிரக்கிச்
சந்தமரிக் கையளிக்கத் தற்பரத்தை வேண்டி
தாட்கமலத் தொப்படைக்கச் சார்பினர்க் குழைந்து
விந்தையுரு வர்ன்னபரி வட்டத்தைமேற் போத்தி
வித்தகனைக் கல்லறைச் சேமித்தனர்க ளன்றே. 10

## ஆண்டவர் உயிர்த்தெழுந்ததின் பேரிற் கூறிய,
## கீர்த்தனை.

இராகம். கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

பரன்மரித் துயிர்த் தெழுந்தான்! அருட்
பைம்பர மண்டல ரெங்குங் கொண்டாடப்

அநுபல்லவி.

கரம்விரித்துயிர் கொடுத்தவன்திருக் காட்சி
சரணடைக்கல மதைபெறற்கிதே சாட்சி. (பரன்)

சரணங்கள்.

வேத மதிப்ர காசம்—மண்டலமூன்றில்
மெய்யா யிற்றுவிஸ் வாசம்
ஆதன் குடிகட் செய்தபாவங்க ளெல்லா நாசம்
அலகை கணங்கள் நடுநடுங்கி யழ வுல்லாசம். (பரன்)

சிலுவை துவஜ வீரம்—இனிதுமறை
சீர்பாடு மேவிஸ்தாரம்
ஜலமே னடந்தபுகழ்த் தண்டாட்சீர லங்காரம்
தழைக்குது திருமோக்ஷ மழைக்குதிதோ காம்பீரம்.(பர)

வெஞ்சினர்கள் பிர்ம்மிக்க—பஞ்சகாயத்தை
வேண்டிதாள் நமஸ் கரிக்க
செஞ் சொற்கவி சம்பி ரமன்தோமாஸ் ப்ரசங்கிக்க
திருச்சிலுவை த்யானப் பொற்சபையார் வந்திக்க. (பர)

---

## திரு! விண்ணப்பப் பற்று.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்,

கலைநகைக்கும் பூமுடிபூத் தெரிகிரண மெனவிளங்குங் கடவுண் ஞான, மலைநகைக்குந் தெண்ணிலவே தெளிந்தவர்க ளுளங்கமழு மருவேவன்மை, சிலைநகைக்கா தகம்புடைத்து இறுமாப்பான் வெறி யுளேந்து தீய்ப்பாழ்பவ்வ, வலைநகைக்கு ளேமயங்கி கிடந்தழிவா னெனைக்கழலில் வரச்செய் வாயே.

செய்யதிருக் கோகனத்தாளன்றி கதிவேறுளதோ சேறுதற்கு, ஐயேயிலை யெனத்தெரிந்தும் பேதையைக்கை விடுதலுனக் கழகோ சொல்லாய்,வெய்யரவு மதயானை நாய்குரங்காற் றுக்கித்து வெதும்பு மென்முன், தையதிமி தாமெனவந் தாடியருட் கருணைமழை தனை பெய்வாயே.

ஆயபொருட் புலன்சொருபத் துட்கலந்த பேரழகா வடியர்
மாட்டு, தூயபொரு ளெனக்காட்சித் தந்துவெளிக் கலந்தெரியுஞ்
சுடரே தீபத், தேயபொரு ளானபிர மேயனேவிஞ் ஞானமணிச்
செல்வக் குன்றே, தீயபொரு ளெனப்புவியுட் கடைபடுவா னுடைப்
படுமுன் சீர்செய்வாயே.

சீர்த்திமிகுத் தானந்த துரியதன தீதமெனுந் திவ்விய நாட்டிற்,
பூர்த்திமிகுத் தரசுரிமைக் கொலுவிழைக்கும் புண்ணியனே பொற்
றுள்வீழ்ந்து, ஆர்த்திமிகுத் தரணிழலிற் குடியிருக்க மனங்கனிந்
தென் னன்புக் கையே, கீர்த்திமிகுத் திடக்கருணைக் குளிரமழை
பெய்மோனக் கிரியை கோவே.

மோனதன வாழ்வுடையார் நிலமனத்தை யபகரித்தே முத்
தர்க் கென்றே, ஞானதன விதைதெளித்து அருட்புனலைப் பாய்ச்சி
கதிர் நல்க செய்தே, ஈனதனர்க் கவிர்ப்பாகஞ் செய்துரையே பிச்
சைபுகு மெளிய னென்பங், கானதன மானதையே தந்தருள நற்ச
மய மளித்தி டாயே.

இடாதிருக்கா துனதுநெஞ்சங் கன்மலைய மலப்பாவா யிளகு
மென்சொற், சுடாதிருக்கா தப்பப்பா? சுடுமுன்னங் கருணைகொடுத்
தூய்மை யாக்கை, விடாதிருக்க மெய்ப்புளக முற்றுளமே கனிந்த
பிர்த விருந்துசெய்தே, கெடாதிருக்கு மாறளித்துன் னடியர்க்கடி
மைப்படநற் கேண்மை செய்யே.

மைப்பழிக்கு நெஞ்சுடைய னிறுமாப்பார் துவஜன்தலைவணங்
கா லோபி, பொய்ப்பழிக்கும் பொய்யுடையன்! பொய்யுடலை மதித்
துளமே புகழுவானை, மெய்பழிச்கும் மெய்யறியா மறைசொருபவடி
வனையே வேண்டுதற்குக், கைபழிக்கும் பிறவியினைப் பெற்றவெனைக்
கண்ணோக்கிக் காத்திடாயே.

காக்கதயையுடையவன்கண்! பார்க்கவெங்கு நிறைந்தவன்செய்
கன்மப்பாவம், போக்கநிதி கொண்டவனல் வாக்கியசி லாக்கியமி
கும் புண்ய கண்யன், ஆக்கலழித் நற்குரியன்! அன்னியனென் பார்
க்குதொலை யாவன் ஞான, வாக்குடையா ருளங்கமழு மந்திரனே!
எளியையென்னை வந்தாட்கொள்ளே.

வந்தடைவார்க் கடைக்கலமா கியதலமே! தலமலித்தோர் வாழ்
த்தும்வேதச், சிந்தடைக்க லத்தலமே! நின்மகிமை வித்தகத்தின்
செயலோ ராத, பந்தடைக்க லன்சொலற்கு நெறிதெரியே னெனினு
மருட் பட்ச முற்றுத், தொந்தடைக்க லம்முனையே வேண்டுதற்கு
இனியமலர்த் துணைதாணல்கே.

நல்லரும்பா மழையெனப்பொன் மலர்தெளிக்க நின்னும நகை
விலாசச், சொல்லரும்பா பரிமளிக்கத் துதியரும்பா வுனைவிளிக்கச்
சுருதி வாய்மைக், கல்லரும்பா மூதுரையே பகுதியென விதிகாட்ட
கனிந்திடாத, புல்லரும்பா செஞ்சொற்கவி சம்ப்ரமன்தோ மாலை
யுளம் புடைத்தாட் கொள்ளே.

## வாழி விருத்தம்.

திருக் கருணையருள் மழைப் பெய்தேவே வாழி
திவ்ய மரியாயுமுனி சூசை வாழி
அருட் கருணை யென்வொளிவான் சுரர்கள் வாழி
அர்ச்சிய வாதிக்க மறை யாளர் வாழி
தெருட் கருணை நிறைந்த வரர்தீர்க்கர் வாழி
தேசரச ரொடுபாப்பு மன்னர் வாழி
பொருட் கருணை திகழ்சிலுவை த்யான சங்கப்
பொற் சபையார்ப் புகழ் வாழி வாழி மாதோ.

---

## இரக்ஷகர் திருப்பாடுகளின் மீதுகூறிய,

# பஞ்சரத்தினப்பாமாலை.

### காப்பு.

நேரிசை வெண்பா.

உன்னு நினைவி லுருமலிந்து நின்றபிரான்
மன்னுயிரை-மீட்கமனு-வாய்பிறந்து-ஒன்னலர்செய்
கோலமதை-யேர்த்து குருசிலிரு கள்ளர்நடு
பாலெழுந்தான் முளைதினைபற்று.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

1. ஆதியு மநாதியது தானே தாமாய்
அருளரும்பி திவ்யதிருச் சிலுவையாகி
ஜோதியது வெளிகலந்து சகலநன்மைச்
சொரூபமதாய் நிலவியுயிர் ஸ்தாபியாகி
நீதிநடு நாயகமாய்த் தோன்றிஞான
நெறியருளி காக்குந்தயா நிமலன் தூய்மை
மாதிரம்வாழ் வருளநம்பால் வந்தொல்லார்ப்பா
மரமுறைந்த நற்குருவை வணங்குவாயே!

2. மறையவர்க ளெழுதியசொன் வார்த்தை வாய்மை
வடிவுடைத்த மாமிஸ மரூபி ரூபி
முறைபிசகா வண்ணமருட் டெளித்தஞ்ஞான
முளைகிளைக்க வொட்டாது வெட்டி பண்பு
துறைபிசகீரெனப் புகன்றுன் றன்மேற்குற்றஞ்
சுமத்திமறை பழித்தன னென்றியற்றிவஞ்சம்
இறைபழித்தான் உலகிருந்தென் லாபமந்தோ
என்ஞானம்! அஞ்ஞான மெனத் தேர்வாயே!

3. அஞ்ஞானக்கோட் பொய்யுங் கொடுஞ்சொன்னிந்தை
அவமானங் கள்ளருந்துதற் காளாகும்,
விஞ்ஞானந் தன்பற்றும் பிறர்ப்பற்றுன்னி
வேண்டுவன நல்கியுயிர் கொடுக்குமாப்போல்
சுஞ்ஞானப்பதி மகிமையறிந்திடாது
சூரையிடயிருந்து தன்னில் மறைந்தவாறு
செஞ்ஞாயிற்றுஞ்சிடா வண்ணமண்ணுட்
சேதனரை தெரிசிக்கச் சென்றான் பற்றே.

4. பற்றற்றார்பாடி நமஸ்கரிக்கும் போதன்
பைம்பரத்தார் பணிபுரியும் பரமநாதன்
கற்றவர்சொற்படி நடத்துங் கருணையாளன்
கள்ளர்நடு விளங்கிய தூய் கமலத்தாளன்
நற்றவத்தைச் செய்துபர கதிமன்றாடி
நம்மவரை மீட்கவடு வைந்துற்றான்றண்
பொற்பதத்தை விரதஜெப முடைத்துவாழ்த்திப்
புநிதவிசு வாசமனம் போற்றாய்கண்ணே.

5. கண்ணகன்ற ஞாலமெலா நடுக்குற்றேங்கி
கலூஉழ கதிர்மதிய மெழிற்சுடர் கொட்டாது
விண்ணழுங்கி யுடுக்குலங்கள சைவுற்றோங்கு
வெற்பதிர கல்லறைக்கற் பிளக்ககோவின்
வண்ணமணித் திரைச்சீலைக் கிழியவேத
வாய்மை நிறைவேற புண்கண் மாறஞான
அண்ணல்பிரான் திருச்சிலுவைப் படுத்துஎன்னை
யாதரித்தான் பொன்னடியை யஞ்சல்செய்யே.

---

# தேவாரப் பதிகம்.

## அருண்மனப் பற்று.

உருவிற் குருமணி யுயிருளவிர் கதிர் உரையிலி யருமறைப்பூ
மருவிற் பணிவளி! வரிமறை முடிமுதன் வடிவிலி வானரணான்
கருவிற் புனலழற் காற்றெனக் கலந்துபின் கடந்தவன் பொற்கழலைத்
திருவிற் றலைமுடிச் சுமைகொளா விடிலந்தோ தீநர குறுவீரெனே!

எங்குமிலங்கி யிருப்பன லாவிங் கிலையென நீங்கினை யேல்
பொங்கிவழிந்தெழு மாருதமெனக்கடற் பூப்பொழி வான்றயையான்
சிங்கமே நின்றிரு நோக்குளடக்கித் தெளிந்திடு மின்றெளிமின்
அங்கது [illegible]ாற்ற மிடும்பிலை யேவிடி யருநரகுறுவீரெனே! 2

அதுநிலையிதுவென வறிவதுவேநிலை யவைவிடா தீரதனை [வான்
முதுமறைவிதிசொலும் வினைமடுத்துனைசுடும் மூரல்கொளாதீ ருயர்
கதிரவனெதிரொரு கதிரவனுறவுருக் காட்டுங்கொலோ வடிவைப்
பதுமையைப் போலிருந் தரற்றுவீர்மாவெணறி பாழ்நரகுறுவீரெனே
வாழ்மனையம்புவி யார் நிசியம்வழா! மரபினரெனு மடுவின்
வீழ்மனமாசுடைத்தே வினையுட்சுட வெந்தழ னீற்வதெனே
ஏழ்கடலின்முடி யேறியருட்கட லின்பமது வருந்திற்
பாழ்படீர் வாழ்வடை வீரிலையேலிடர் படுநாகுறுவீரெனே! 4

வெஞ்சினக் குஞ்சரமஞ்சைவிடுத்து வெளிப்படின்வாய்மையைக்கண்
டஞ்சிடாநாயெனத் தங்கிநிலைக்கா தரற்றிடுங்கண்கலுழீ
பஞ்சடையாமுன மெய்ப்பொருளைக்கொடு பற்றிடி னற்கதியா
ரஞ்சலிசெய்வர்களா விலையேலடு வழனர குறுவீரெனே. 5

என்றுமிருக்கு மியல்பென வொன்று இரைச்சலிடுமதனை
யொன்றெனக் கண்டறிந் தேற்குமிடத்தி லுவப்பதுவே நெறியாம்
நன்றெனுந் தீதெனுங்காலது இதுவென நழுவவிடாதுமனத்
தொன்றினதே பரமென்றறிவையிலை யேல்நரகுறுவீரெனே. 6

வானெடுவீதியிலாடி நடித்து மதிக்கு ளுருப்பொலிவா
னூனெடுதூலத்து ளோடியொளித்து வுலாவிகிடந்தழிவான்
பானெடுநூலிழையாளர்சொல்மெய்யுரைப் பற்றினையோர்ந்துணர்ந்து
நீநெடுதூரம் போகாதடைவைப்பரம் நிலைகெடிநரகுறுவீரென! 7

மந்திய துள்ளிருந்துங்கதி ராலய வாழ்வடையாதுபலச்
சிந்தனைசெய்வதி லென்பயன் கண்டிலேன்தேர்ந்து தெளிந்தருமாண்
எந்தையைக்கூப்பிகை யஞ்சலிசெய்வது வேவுறுதிநிலைசு
கந்தருநற்பர மாமிலையேலடு கடுநரகுறுவீரெனே! 8

இப்பிறவிப் பொருளே பொருளாமிதை யெளிதெண நீநினையேல்
அப்புவில் மண்ணழியு மழலாற்புன லத்துவழியும் வளியால்
குப்பெனத்தேய்வழியும் வளிமோதிக் கொடிமுடியேறுமுன
மெய்ப்பொருளையுறு வீர்பரமாமிலை யேல்நரகுறுவீரெனே. 9

தோலுடலென்பு பொருந்திய வொன்பான் துவாரவரையரணுள்
நாலுமொடுங்கி யடங்கநில்லாம னடந்திடு முனமவன்பொற்
காலிலானந்த கண்ணீர்பொழிந்துமுடி கற்றையினுற்றுடைக்க
ஞாலம்விடுப்படுங் காண்பாமாமிலை யேல்நரகுறுவீரெனே. 10

---

## ஆண்டவர் திருப்பாடுகளின் பேரிற் கூறிய

# நவமணிமாலை.

இராகம் - பண்பஞ்சமம் - சாப்பு - தாளம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நிலவுலகரசே கதிதலஞ் சிய்த்து நின்றெரி கிரணமே ஞானப் புலமை கொள்வல்லோய்! பற்பலசுருதி பூர்த்தியே கற்று நட்புடைத்து, அலர் பிறையணங்காள் மகவெனவு தித்த வண்ணல் வாறிலக் கணமுடைத்தென், மலந்து கட்படுத்தி நின்றிருச்சிலுவை மலர்க்கழ ணிழலருட்சரணே. 1

அருட்பிரகாசப்படிவ மண்டலத்திலயிர்த்துடல் வியர்த்துஆண் டகைதூய், பொருட்பிரகாசத்பான மான்மிய நற்போத சொற்படிக்குவழாது, தெருட்பிரகாச நியமமே விழைத்துச்சேத நர்ச்செய் வினைக்கிரங்கி, மருட்பிரகாச நீத்திடச்சிலுவை மலர்க்கழணிழலருட் சரணே. 2

கழலணி மொய்த்த வண்டென யூதர்க்கன்றியே நன்றியோ ராமல், அழகணி யானை தூறியே சினந்து அடித்துதைத்திழுத்துமே படிறர், குழலினைச்சுழற்றிக் கோலமே பங்கக்கொடுமையைச்செய மனஞ்சகித்து, நிழலருள்வானே! புநித பொற்சிலுவை நெறிகழற் பணிப்பருட்சரணே! 3

நெறியுறு நீதிவாய்மையர் பாடும்! நித்தனே தத்வ சாகரனே, குறியுணராது இடைந்திடு வார் செய்கொடுமையைத் தாழ்ச்சியோ டேர்த்து, அறிவுறுவானே! அப்பனே கருணையாரணஞ் சொல்லு நாயகனே, இறுதியிலுனது சமூகத்தி னிற்க வெழிற் சிலுவையை யருட்சரணே! 4

எழிலிலகிய விண்ணேத்தும் பிரகாசா? வெங்குமே நிறைந்த விஸ்வேசா, பொழிலிலகிய வாதன்னுளம் பட்டபுண் வடுமாற்றவு மறைசொன், மொழியிலகிடவுஞ் சீடர்கள் ஞானமூதுரை விதை விதைத்திடவும், அழிவிலான் பழிக்காளாகவும் சிலுவை யருட்கழ ணிழற்[illegible]ாட்சரணே. 5

சிலுவைப் பிரகாச வடிவுடையானே! சேண்செங்கோலாளுங்
கோமானே, வலுமையிலாத கேவலர் மாட்டுவதை படுவிஷய மென்
பவமே, சொலுமெந்தனகமே எனைபொருட்செய்து தொய்யலுற்
றனை மதிகனிந்து, புலமையர்ப்பாட வியலா பொற்சிலுவைப் பூவடி
க்கணுதினஞ்சரணே! 6

பூவடி தாவி பாடிடாப்பாவி பொய்யனுக்காயுளம் பொலிந்து,
கோவடியெனும் பொற்கொலுதல நிலவகொண்ட கொள்கைக்குக்
கைமாறு, பாவடி வண்ணம்பாடவோ தெரியாபயலெனக் கன்பொடு
பரமே, சேவடி யென்னுஞ் சிலுவை நல்லாசிர் தேவனே! கொடுத்
தருட்சரணே! 7

கொடுக்கவும், வினையைத்தடுக்கவுங் குருதிகொண்டுமே கழுவ
வுமரத்திற், படுக்கவுங் கருணைகொண்டதால் வந்தப்பயனென்றோ தெ
ரிந்திலேனுயிரை, விடுக்கவும் ஆணியடிக்கவும் முடிமுள் வினைஞர்
கள் சூட்டவன் குருசில், நெடுக்கரம் விரித்த பரமனே! சிலுவை
நிதிபெற வருட்செய்வீர் சரணே. 8

நிதியருள்வானே! நீர்மை குன்றானே! நித்தியானந்தங் கொள்
வானே!, சதிவிழையானே! தயை கொடையானே! சகல மன்னுயி
ரைக்காப்பானே!, பதியெலாம் வாழ்த்தப்பரங் கொடுப்பானே! பவ
ங்கெடவே! துமிப்பானே!, ததியிதோ! பிரம்பான்! தோமாலை கை
த்தூக்கித் தற்பரா காக்க தாட்சரணே! 9

---

இந்நூலாசிரியர் தனது அந்திய நிலைமுன் வியந்து தன்னை ஒப்புக்கொடுத்த

## திருவருளடைக்கலப்பத்து.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பண்ணுறு நிலவுலகி லிருந்து பலனில்லையெங்கட் பரமே வாய்
மை, சொன்னாலுஞ் செவிகேளா திருக்கின்றீர் பெருந்தோஷம்
சுவாமி கேண்மை, நின்னாலு நின்னடியா ராலும்புகழ் வருமலது நெறி
ப்ர காசந், தன்னாலே வருமலது வேறொருவ ராலேவரா தயைநீ
செய்யே. 1

செய்யமலர் கோகனத்தைச் சுராளிகாள் மொய்த்து[illegible] தேனை
மாந்தி, தய்பதிமி தாமெனவென் றுடுகின்று ரவர்கள்[illegible] தானை

யேந்தி, உய்யுதற்கோ வகையறியேன்! இருமாப்பா னறிவழிந்து உளர்வா னுக்குக், கையைகொடுத் தாதரியு மையேகுரு நசரைபதி காட்சி நல்கே. 2

நல்வெழிலைப் படைத்தானே முத்தொழிற்கு நாயகனே நாமக் கீறஞ், சொல்வெழிலைக் காட்டுகின்ற தவ்வெழிலை யோராத சருகிடே டன், பல்வெழிலைக் காட்டுகின்ற சொருபநிலை யையறிந்து பகர்ந்து பார்த்து, எல்லை யெழிலைக்காணப் போறேனோ? இல்லையில்லை யெனை க்கண் பாரே. 3

பாராலும்! பொருட்படைத்தப் பெரியவர்க ளழகியசொற் பாவையாலுந், தேராலும் கரிபரிக ணிறைந்தவாறாலுஞ்சே தனங்க ளாலும், தாராலும் வெற்றிஜெய மாலைகொடு வாழ்ந்தாலுஞ் சழக் கொன் றுண்டோ, யாராலும் ஆகாது நின்கருணைப் பிழம்பமிர்தை யளித்தா னையே. 4

ஆளாது கைசோர விட்டுவிடு வையேலென் னகந்தை தாழ்ந்து கேளாமல் மீறிவிடும்! அப்போதற் கென்செய்வேன் கிருபை யானை, வாளாலே வெட்டிடினும் கேளாது! வணக்கமுற்று வந்த வென்னை, நாளாறிற்கண்பார்த்து பிணிதொலைத்து எளியையெனைரட்சிப்பாயே.

எளியனெனைக் கரம்பிடித்து முகமனுரை பேசிலுன்னை யெதிர் த்துக்கிட்டி, வெளியிழுத்து விடுவரோசொல் வெளிகலந்த பரம்பொ ருளே மெய்ம்மை கண்டு, ஒளியிலொளி யாய்நிறைந்த உத்தமனே சற்குணனே யுளம்பூ ரித்துத், தளிர் மலரை யடைக்கலமாய்த் தந் தருள வேண்டுகிறேன் தயைசெய் சாமி. 6

சாயாத நெறியுடையா கொடையுடையா படையுடையா தனி வான் மோக்ஷந், தோயாத சூரியனே நீயாத சாகரத்திற் றுன்பங் கொண்டு, பாயாத பெருவெள்ளத் தடங்கடலிற் சிதறுண்ட பதராய் விம்மி, நோயாலே வாடுகின்றேன் கடைக்கணித்து எனக்குறுதி நுவலு வீரே ! 7

உறுதியுரை கொண்டவர்கள் தினம்பரவும் ரட்சகனே யுண்மை யொன்றி, இறுதிநடு தீர்வையிலே கேட்குமொழிக்கென்சொல்வேன் இம்பர்வேந்தே, சுருதிபடித் ததன்படியே நடந்தேனு வில்லை யில் லைத் தூ[illegible]மைகொண்டு, கருதிபரஞ் சேர்த்தருள வேண்டுகிறேன் என்னை[illegible]க் கணித்தாட் கொள்ளே. 8

கொள்ள வல்லோய் வெள்ளைபிறை கொண்டணங்கு பெற்றதிருக் குமரா ஞானந், தெள்ள வல்லோய் நின்கருணை யஞ்ஞான வேரறுத்து தேற்று தற்குத், தள்ளவல்லோய் பொன்னடியிற் றெண்டுவைத்துச் சாகுதற்குத் தலைநிமிர்ந்து, விள்ளவல்லோய் என்னைபுறஞ் செய்திடற்கு எண்ணுதிர் விமல கோவே. 9

கோவேறு வாழ்வானே குலமுறையுந் தலைமுறையுங் கொள்ளா தந்தோ, பாவேறி வாழ்வானே பரிதிதுகின் மேற்போர்க்கப் படுத்திட்டானே, பூவேறி யாறழகை மாற்றிப்புறப் பட்டுவந்த புண்ய கோனே, தேவேறி வரவேண்டு கின்றனன்மெய் எங்கள்குல தெய்வ சாமி. 10

## திருக்கல்லறை அடக்க விண்ணப்பம்.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

வஞ்சமனம் பிணிபசிநோய் களையிளைப்பு தரித்திரத்தால் வதங்கி வாடி, தஞ்சமென வருபவர்க்கு பலவாறு நல்கி தற்பரமே காத்து, கஞ்சபத நிழலருள்வை நவகணஞ்சீர் பாட முதிர்கருணை வைத்து, அஞ்சுகாயத்தி னடைக்கலத்தைக் கொடுத்தாதரிப்பை அமலதேவே.

நல்லறையிலிருந்து நச்சரைப்பரமே வேண்டுகிறேன் நற்ப்ரகாசம், கல்லறையிற் பதித்தருளும் சொல்லரும்பி பூப்பொழியும் காட்சி சீர்த்தி, பல்லறையும் சீர்படுத்தும் பாவியர்களெங்களை கைவிடவே வேண்டாம், சொல்லறையை கொள்ளுமெங்கள் சத்தியவேத வடிவே சுவாமி தோத்ரம்.

சம்பூரணம்.

## வா ழி வி ரு த் த ம்.

வீடருட் பரமன் வாழி, விமலிமா மரியுஞ் சூசைக்
கோடரும் புநிதன் வாழி, குருமறைச்சுரரும் வாழி,
நீடருஞ் சிலுவை யொன்றி நின்றெலாங் காத்த ஞானப்
பாடுகள் வாழி, தூய்மைப்பாரெலாம் வாழிமாதோ.

## கையொப்ப அன்பர்களின் திரு நாமதேயங்கள்.

| | |
|---|---|
| Mr. A. B. Jhonson | Nova Garden Cochine. |
| ,, W. Mc. Mauns | Rangoon, Burma. |
| ,, A. C. Cowles | |
| ,, H. Godfrey | Shaibah. |
| ,, C. O. Rozario | Basrah. |
| ,, J. Rozario | Madras. |

## கையொப்ப அன்பர்களின் திரு நாமதேயங்கள்.

| | | |
|---|---|---|
| ,, | J. Grant. | |
| ,, | E. Venaut | Pandicherry. |
| ,, | L. D. Cannon | Shaibah. |
| ,, | J. Cannon. | |
| ,, | F. Casey. | |
| ,, | L. Gvoing. | |
| ,, | G. F. Doran | Shaibah. |
| ,, | K. G. Delaug | |
| ,, | E. Dunnary | |
| ,, | J. Mikale | |
| ,, | Bennet | |
| ,, | W. N. Seaman | |
| ,, | Friend | |
| ,, | R. J. Mahn | |
| ,, | W. J. Collier | |
| ,, | K. Cooper | Rangoon. |
| ,, | C. Nagle | |
| ,, | Heldt | Madras. |
| ,, | J. Jude | Madras. |
| ,, | J. A. Paris | |
| ,, | A. S. Pillay | Madras. |
| ,, | G. G. பிரகாசம் | கோயம்பத்தூர். |
| ,, | A. S. திமோத்தி | மாங்களூர். |
| ,, | N. J. சுந்திரம் | |
| ,, | A. சகோதரன் | |
| ,, | R. N. ஞானபிரகாசம் | திருச்சி. |
| ,, | A. S. ஜோச்ப்பிட்டர் | Ooty. |
| ,, | N. மதினகோபால் | Madras. |
| ,, | A. ஜோசப் | இரங்கூன். |
| ,, | K. இராகுவேல் | Madras. |
| ,, | ஆதிமூலம் | |
| ,, | கா. அ. சந்திரகாசன் | பிளவர்ஸ் ரோட் மதராஸ். |
| ,, | வேளாங்கண்ணி கண்டல் | திருச்சிறுபள்ளி. |

Loco works Shaibah.

,, S. K. T. ஆரோக்யசாமி

அர்ச். சூசையப்பர் பஜனையின்

உதவியாளர் இராயபுரம்

ண்பர்கள் அனைவரும் Shaibah Loco wor[illegible] Shop,

உத்தியோகஸ்தர்கள்.

## கையொப்ப அன்பர்களின் திரு நாமதேயங்கள்.

சென்னை சவுத் இந்தியா எக்ஸ்போர்ட் கம்பெனி மேஸ்திரிகள்.

சென்னை காசிமேடு திருத்வதியான பஜனை சங்கம்.

கனம். P. V. சத்யநாதன் பிள்ளை
,, V. செல்வநாதன் பிள்ளை
,, D. S. ஜஸ்டீன் பிள்ளை
,, T. சாமிதாஸ்
,, M. ராஜகோபால்
,, A. ஞானம்
,, M. வைத்தியலிங்கம்
,, C. V. ராஜு
,, P. V. சுந்தரம்
,, M. இராயப்பன்
,, D. ஜெயமணி
,, R. டேவிட்
,, T. அந்தோனிதாஸ்
,, L. இருதயநாதன்
,, T. சூசை
,, S. பெம்மியன்
,, C. ஞானம்

வி. கி. நா. நாகலிங்கம் பிள்ளை — இராயபுரம்.
வே. வேதம் பிள்ளை — வண்ணையம்பதி.
F. செம்புதாஸ் பிள்ளை — do
Mrs Lily Marian — ராயபுரம்.
Mr. A. M. S. ஜீவரத்தினம் — do
J. R, Simon
வே. இ. மாணிக்கம் ஜோதிடர்
A. Barthasarathy Mahemaden. Garden
கொ. சி. பாலசுந்திரம் மேஸ்திரி

## மெஸோ பட்டோமியா கூத் நகர் கையொப்ப அன்பர்களின் திருநாமதேயங்கள்.

V. C P. சாரதி
F. அந்தோனி
L. அந்தோனி
A. அந்தோனி
P. S. சாமிதாஸ்
R, கோவிந்து
J. K. ஆரோக்யசாமி
G. கெங்காராம்
D. ஆரோக்யசாமி
D. ஆரோக்யசாமி
M. ஜோஸப்.
N. முருகேசன்
J. ராக்
S. அந்தோனி
A. ஜோஸப்
F. பிரான்சீஸ்
V. திருக்காமணி
A. டேவிட்
P. முத்துசாமி
J. சாலமோன்
M. அந்தோனி
பிரயாசையாளர் S.K.T. பிரகாசம் பிள்ளை

## வாழிவிருத்தம்.

பார்பிறந்து பவமொழித்த பரன்ருள் வாழி
பானுவுடை யணிமரியுஞ் சூசைவாழி
பேர்புகழ்ந்து வானவரச் சிஷ்டர்வாழி
பேரின்பம் நிறைந்து பாப்பு குருக்கள்வாழி
சீர்பொலிந்து திருச்சபையோர் வேந்தர்வாழி
திரித்வஞான தியானவுத்தான வினிய
தமிழ் தழைத்தோங்க வுதவிசெய்த
நேர்ஞான்றும் வாழ்கமாதோ.

J. Rozario